Volume Two

கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படை மூலக்கூறுகள்

Witness Lee & Watchman Nee

திரட்டு இரண்டு

கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படை மூலக்கூறுகள்

விட்னெஸ் லீ & வாட்சுமன் நீ

விற்பனைக்கு அல்ல
இலவச விநியோகத்திற்காக மட்டும்

Living Stream Ministry
Anaheim, California • www.lsm.org

© 2010 Living Stream Ministry

All rights reserved. No part of this work may be reproduced or transmitted in any form or by any means—graphic, electronic, or mechanical, including photocopying, recording, or information storage and retrieval systems—without written permission from the publisher.

Original Title:
THE BASIC ELEMENTS OF THE CHRISTIAN LIFE VOL. 2
© 2003 Living Stream Ministry

Kiristhava Vazhkaiyen Adippadai Mulakurrugal. Therattu- 2
(Tamil)

By
WITNESS LEE and WATCHMAN NEE

First Edition, 2010

ISBN: **978-0-7363-4464-7**

Translated in India by
Amana Literature [Pvt] Ltd.
Gurgaon, Haryana, India
Email: office@amanaliterature.in
www.amanaliterature.in

See back page for local distribution information.

Published by
Living Stream Ministry
2431 W. La palma Ave., Anaheim, CA 92801 U.S.A.
P. O. Box 2121, Anaheim, CA 92814 U.S.A.

பொருளடக்கம்

தலைப்பு		பக்கம்
	முன்னுரை	5
1	கர்த்தரோடு செலவிடும் நேரம்	7
2	கர்த்தரைத் தொட ஓர் எளிமையான வழி	15
3	ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது	23
	கர்த்தருடைய இரண்டு வேலையாட்களைப்பற்றி	35

முன்னுரை

இப்புத்தகம் மூன்று அத்தியாயங்களால் தொகுக்கப்பட்டுள்ளது; இவைகள் கிறிஸ்தவ வாழ்க்கையின் சில அடிப்படையான மூலக்கூறுகளைக் காண்பிக்கின்றன.

இப்புத்தகம், மூன்று தனித்தனி சிறுபுத்தகங்களாக ஏற்கெனவே வெளியிடப்பட்டிருக்கின்றன: விட்னெஸ் லீ எழுதின *கர்த்தரோடு செலவிடும் நேரம்*, *கர்த்தரைத் தொட ஓர் எளிமையான வழி*, மற்றும் வாச்மென் நீ எழுதின *ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது*.

அத்தியாயம் ஒன்று

கர்த்தரோடு செலவிடும் நேரம்

"இங்கு ஒவ்வொரு நாளும் முப்பது நிமிடங்கள் ஜெபிக்கிற எல்லாரும் உங்கள் கைகளை உயர்த்துங்கள்," என்று அமைச்சர்களுடைய ஒரு மாநாட்டில் அதன் தலைவர் கேட்ட கேள்வியைப்பற்றி ஆன்ட்ரூ முர்ரே ஜெபத்தைக்குறித்த தன் புத்தகத்தில் கூறுகிறார். அந்த முழுக் கூட்டத்திலும் ஒரேவொரு கை மட்டுமே உயர்த்தப்பட்டது! அதன்பின், தினமும் பதினைந்து நிமிடங்கள் ஜெபிக்கிற எல்லாரும் தங்கள் கைகளை உயர்த்தும்படி தலைவர் கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் பாதிபேருடைய கைகள் உயர்ந்தது. தினமும் ஐந்து நிமிடங்கள் ஜெபிப்பது யார் என்று அவர் கேட்டபோது, மீதியிருப்பவர்களுடைய கைகள் உயர்த்தப்பட்டது. இன்று இது நம்முடைய நிலைமை இல்லையா? நாமெல்லாரும் தனிப்பட்டவிதத்தில் இந்தக் கேள்வியை நம்மிடம் கேட்கவேண்டும்: "நான் தினமும் கர்த்தரோடு எவ்வளவு நேரம் செலவிடுகிறேன்?" இன்று கிறிஸ்தவர்கள் மத்தியிலுள்ள மிக உயர்ந்த தேவை, ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய பிரசன்னத்தில் வாசித்து, ஜெபித்து ஒரு குறிப்பிட்ட அளவு நேரம் செலவிடுவதே ஆகும்.

உடலுக்குரிய மண்டலத்தில் நாம் உடலுக்குரிய உணவை சாப்பிடுவதால் உடலுக்குரிய போஷாக்கைப் பெற்றுக்கொள்ள தினமும் நேரம் செலவிடவேண்டும். நாம் ஆவிக்குரிய உணவை சாப்பிடுவதால் ஆவிக்குரிய போஷாக்கைப் பெற்றுக்கொள்ள எவ்வளவு அதிக நேரம் செலவிடவேண்டும்! தற்போதைய சூழ்நிலையின்படி அறிவுக்காக வேதத்தை ஆழ்ந்துபடிப்பதும், மனப்பாடம்செய்வதும், தியானம் செய்வதும், ஆராய்வதும் எப்படி என்பதை ஏறக்குறைய எல்லாக் கிறிஸ்தவர்களும் அறிந்திருக்கிறார்கள், ஆனால் கர்த்தரை அனுபவித்துமகிழவும், ஆவிக்குரிய போஷாக்கைப் பெற்றுக்கொள்ளவும் தேவனுடைய வார்த்தையிடம் வருவது எப்படி என்பதை வெகு சிலரே அறிந்திருக்கிறார்கள்.

தேவனை நம்முள் வாழ்கிறவராகக் கொண்டுள்ளவர்கள் என்ற முறையில் நாம் அவரை அனுபவித்துமகிழவும், அவரை உட்கொள்ளவும், ஆவிக்குரிய போஷாக்கைப் பெற்றுக் கொள்ளவும் தேவனுடைய வார்த்தையிடம் வர ஒவ்வொரு நாளும் கொஞ்சம் நேரம் ஒதுக்கிவைக்கவேண்டும். நாம் கர்த்தரைத் தொடர்புகொண்டு, அவரால் பலப்படுத்தப்பட ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம்

முப்பது நிமிடங்களாவது கர்த்தரோடு செலவிடவேண்டும் என்பது மற்றவர்களுடைய அனுபவங்களிலிருந்தும் சாட்சிகளிலிருந்தும் தெளிவாகிறது. இந்த நேரத்தில் நாம் வாசிக்கவும் ஜெபிக்கவும் வேண்டும்; இதை பத்து நிமிடங்களில் போதுமான அளவுக்குச் செய்ய முடியாது. நேர்த்தியாக வாசிக்கவும் ஜெபிக்கவும் நீண்ட நேரம் தேவைப்படுகிறது. வாசிப்பதற்கும் ஜெபிப்பதற்கும் அரை மணிநேரம்கூட மிகக் குறுகியதுதான், ஆனால் நிச்சயமாக கர்த்தருடைய வார்த்தையை ஜெப-வாசிப்புசெய்ய நாம் ஒவ்வொரு நாளும் கர்த்தரோடு அரை மணிநேரம் செலவிடமுடியும்; இதற்கு மிகச் சிறந்த நேரம் காலையில்தான்.

இந்த முப்பது நிமிடங்களின்போது அறிவு, ஒரு செய்தி, ஓர் இயக்கம் அல்லது ஒரு வேலை முதலானவைகளைப்பற்றி நாம் மறந்துவிடவேண்டும். இவையெல்லாம் மறக்கப்பட்டு, கர்த்தருடைய பிரசன்னத்தில் நேர்த்தியான, போதுமான அளவு நேரம் செலவிடுவதற்கு நம் முழு கவனமும் செலுத்தப்பட வேண்டும். தேவனுடைய குமாரர்கள் என்ற முறையில் எல்லாக் கிறிஸ்தவர்களும் கொண்டுவரப்படவேண்டிய முதன்மையான, பிரதானமான அனுதின அனுபவம் இதுதான். ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் முப்பது நிமிடங்களாவது நாம் நம் மனதை அதிகமாகப் பயிற்சிசெய்யாமல், ஜெப-வாசிப்பில் எளிமையாக நம் ஆவியைப் பயிற்சிசெய்ய கற்றுக்கொள்ளவேண்டும். அனுதினமும் கர்த்தருடைய பிரசன்னத்தில் முப்பது நிமிடங்களைவிட குறைவாக நேரம் செலவிடுகிற எந்தக் கிறிஸ்தவனும் போதுமான அளவுக்கு ஆவிக்குரியவனாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பது கூடாத காரியம். இது ஒரு நிலையான கோட்பாடு. அனுதினமும் சாப்பிடாத ஒருவன் ஆரோக்கியமாக இருக்கமுடியுமா?

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நாம் இதைச் செய்வோமானால், கர்த்தர் நம்மில் மாபெரும் மாற்றத்தை நடப்பிப்பார். நாம் கிறிஸ்துவை அனுபவிப்பது ஆழமாக்கப்படும், இறுதியாக மற்றவர்களிடத்தில் நம் தாக்கம் மேலோங்குகிறதாக இருக்கும். நம்மிடையே உள்ள முழு சூழ்நிலையும் அடியோடு மாற்றப்படும், போதனையினாலும் ஆழ்ந்துபடிப்பதினாலும் கடிந்து புத்திசொல்வதினாலும் அல்ல, மாறாக கர்த்தரைத் தொடர்புகொள் வதினால் ஆகும்.

நம் ஆவிக்குரிய வளர்ச்சியின்பொருட்டு கர்த்தரோடு இந்த நேரத்தை செலவிட நாம் விலைக்கிரயம் செலுத்தவேண்டும். காலை வேளைகளில் நீண்ட நேரம் நம் படுக்கைகளில் உறக்கத்தோடு படுத்துக்கொண்டிருப்பதை நாம் நேசிக்கக்கூடாது. நாம் நம் படுக்கையை நேசித்தால், நாம் கர்த்தரை ஒருபோதும் நேசிக்கமுடியாது என்று வாச்மென் நீ ஒருமுறை கூறினார்.

கர்த்தரைத் தெரிந்துகொள்வதா அல்லது படுக்கையைத் தெரிந்துகொள்வதா என்ற ஓர் உண்மையான போராட்டம் நம்மெல்லாருக்கும் இருக்கிறது.

கர்த்தருடைய இரக்கத்தினாலும் கிருபையினாலும் நாம் கர்த்தருடைய பிரசன்னத்தில் அனுதினமும் அதிக நேரம் செலவிட விரும்பி, ஒத்துக்கொண்டால், நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் போஷிக்கப்படவும் அனுபவித்துமகிழவும் தேவனுடைய வார்த்தையை எப்படி தொடமுடியும்? நாம் ஒரேவொரு காரியத்தை மட்டுமே செய்ய கற்றுக்கொள்ள வேண்டும், அதாவது நம் வாசிப்பை நம் ஜெபத்தோடு கலந்திணைக்கவேண்டும். நாம் ஜெபத்தோடு நம் வேதவாசிப்பைக் கலந்திணைப்பதாலும், வாசிப்போடு நம் ஜெபத்தைக் கலந்திணைப்பதாலும் கர்த்தரைத் தொடர்பு கொள்ளவேண்டும். இதனால்தான் *ஜெப-வாசிப்பு* என்ற ஒரு புதிய வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. நாம் வார்த்தையை *ஜெப-வாசிப்பு* செய்யவேண்டும்.

முதலில், தானாகவே கர்த்தரிடம் ஒரு சிறிய ஜெபத்தை ஏறெடுத்து தொடங்குங்கள். அதன்பின் உங்கள் வேதாக மத்தைத் திறந்து, வாசிக்க ஆரம்பியுங்கள். நீங்கள் வாசிக்கும்போது, நீங்கள் வாசிப்பதைக்கொண்டு தானாகவே கர்த்தருக்கு மறுஉத்தரவளி யுங்கள். ஜெபிப்பதற்குமுன்பு ஒரு நீண்ட பத்தி அல்லது ஒரு நீண்ட பகுதி போன்ற மிக அதிகமான வசனங்களை வாசிக்கா தீர்கள். நீங்கள் வாசிக்கும்போது, ஜெபிப்பதினால் கர்த்தருக்கு மறுஉத்தரவளியுங்கள்.

நீண்ட வாக்கியமுள்ள ஜெபங்களை ஜெபிக்க முயற்சி செய்யாதீர்கள்; மேலும் அநேகக் காரியங்களுக்காக ஜெபித்து, உங்களுக்காக ஏதோவொன்றைச் செய்யும்படி கர்த்தரிடம் கேட்காதீர்கள். எளிமையாக *நீங்கள் வாசித்த வார்த்தை களைக்கொண்டு ஜெபிக்கக்* கற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் வார்த்தையை வாசிக்கும்போது உங்களுக்குள் மறுஉத்தர வளிப்பதை உச்சரிப்பதே அல்லது வெளிப்படுத்துவதே மதிப்புவாய்ந்த ஜெபம், அதாவது கர்த்தரைத் தொடர்புகொள்கிற ஜெபம்.

அனுதினமும் இந்த முப்பது நிமிடங்களை, கர்த்தரிடம் அநேகக் காரியங்களைச் செய்யும்படி கேட்பதற்காக அல்ல, மாறாக அவருடன் அந்நியோந்நியத்தில் தங்கியிருந்து, அவரை அனுபவித்துமகிழ்வதற்காக செலவிடவேண்டும். நாம் அவரை எவ்வளவு அதிகமாக அனுபவித்துமகிழ்கிறோமோ, அவ்வளவு அதிகமாக அவர் பிரியப்படுகிறார். இதையும் அதையும் செய்யும்படி நாம் அவரைக் கேட்டால், "புத்தியில்லாத பிள்ளையே, இந்தக் காரியங்களையெல்லாம் நான் செய்யும்படி நீ கேட்டுக்கொள்வது அவசியமற்றது. என்னால் அதை கவனித்துக் கொள்ளமுடியும்; நீ என்னை அனுபவித்துமகிழ்வதை மட்டுமே செய்யவேண்டும்" என்று அவர் சொல்லுவார்

புதிய ஏற்பாட்டில் கர்த்தராகிய இயேசு தேவனுடைய வார்த்தையை ஆவிக்குரிய உணவு என்று பேசுகிறார்: *"அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்" (மத். 4:4).* தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையும் நம்மைப் போஷிப்பதற்கான ஆவிக் குரிய உணவாக இருக்கிறது. தேவனுடைய வார்த்தையை உட்கொண்ட மூன்று பேருடைய சம்பவங்களை வேதவாக்கியங்கள் வெளிப் படுத்துகின்றன. ஒன்று எரேமியா; *"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்..." என்று அவர் சொன்னார் (எரே. 15:16).* இந்த வாக்கியம் நம் மனித கருத்தின்படியானதல்ல. வேதாகமத்தில் எழுதப்படவில்லை என்றால், நாம் தேவனுடைய வார்த்தையை உட்கொள்ள வேண்டும் என்று நாம் நினைத் திருக்கவேமாட்டோம். நாம் வார்த்தையைப்பற்றி கற்றுக் கொள்ளவேண்டும், வார்த்தையை ஆழ்ந்துபடிக்கவேண்டும் என்று நாம் சொல்லக்கூடும். அதிகபட்சமாக, நாம் தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றுதான் சொல்வோம். ஆனால் *உட்கொள்!* என்ற சொல்லை நாம் பயன்படுத்தவே மாட்டோம். *எரேமியா தேவனுடைய வார்த்தையை உட்கொண்டார். அவர் வார்த்தையைத் தனக்குள் பெற்றுக்கொண்டு, அதைத் தன்மயமாக்கி, அதைத் தன்னுடைய ஒரு பகுதியாக்கிக்கொண்டார் என்பதே இதன் அர்த்தம்.*

"உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது," என்றும் அதே வசனத்தில் எரேமியா கூறினார். இது ஒருவிதமான அனுபவித்துமகிழ்தலாகும். வார்த்தை உட்கொள்ளப்பட்ட பிறகு, மகிழ்ச்சியாகவும் களிகூருதலாகவும்கூட மாறியது. மகிழ்ச்சி உள்ளே அனுபவிக்கப் படுகிறது, களிகூருதல் வெளியே வெளிப்படுத்தப்படுகிறது. தேவனுடைய வார்த்தை அனுபவமகிழ்ச்சியாக இருக்கிறது; அது நமக்குள் எடுத்துக்கொள்ளப்பட்டு, நம் ஆள்தத்துவத்திற்குள் தன்மய மாக்கப்பட்டபிறகு, அது நம்முள் மகிழ்ச்சியாகவும், வெளியே களிகூருதலாகவும் மாறுகிறது.

இந்த கருத்தை நமக்கு வெளிப்படுத்துகிற மற்ற அநேக வசனங்களும் இருக்கின்றன. *"உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்; என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்" (சங். 119:103).* வார்த்தை அனுபவமகிழ்ச்சியாக இருக்கிறது, அது நம் சுவைக்கு தேனைவிட அதிக இனிமையாகவும், இன்பமாகவும் இருக்கிறது. தேவனுடைய வார்த்தை நாம் கற்றுக்கொள்வ தற்காக மட்டுமல்ல, அதைவிட அதிகமாக அதை நாம் சுவைப்பதற்காகவும், அனுபவித்து

மகிழ்வதற்காகவும், ஜீரணிப்பதற்காகவும் இருக்கிறது என்று இந்த வசனங்கள் எல்லாவற்றிலிருந்தும் நாம் உணர்கிறோம்.

அதன்பின் வார்த்தையை உட்கொள்வது கர்த்தரை ருசிப்பதாகும் என்று 1 பேதுரு 2:1, 3ல் நாம் பார்க்கிறோம். "கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்." 2-ஆம் வசனத்தில் வார்த்தையை உட்கொள்ளுதல் இருக்கிறது, 3-ஆம் வசனத்தில் கர்த்தரை ருசித்தல் இருக்கிறது. நாம் தேவனுடைய வார்த்தையை நம் ஆவிக்குரிய போஷாக்காக உட்கொள்ளும்போது, நாம் கர்த்தரை உட்கொள் கிறோம். ஆகவே எரேமியாவைப்போல நாம் வார்த்தையை உட்கொள்ள வேண்டும்; அப்போது நாம் கர்த்தரை அனுபவித்து மகிழ்ந்து, ஆவிக்குரிய போஷாக்கைப் பெற்றுக்கொள்வோம்.

இன்னொரு முக்கியமான வசனம் 1 தீமோத்தேயு 4:6: "விசுவாசித்திற்குரிய வார்த்தைகளினால் போஷிக்கப்பட்டு... கிறிஸ்து இயேசுவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய்." ஒருவேளை நீங்கள் பல வருடங்களாக கிறிஸ்தவத்தில் இருந் திருக்கலாம். நாம் தேவனுடைய வார்த்தையில் போஷிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா? ஒரு சட்டமாக, நாம் வார்த்தையிலும், வார்த்தையாலும், வார்த்தையைக்கொண்டும் "போதிக்கப்பட" வேண்டும் என்றுதான் எப்போதும் நினைக்கிறோம். ஆனால் போஷிக்கப்பட்டு என்ற வார்த்தையை எத்தனை கிறிஸ்தவர்கள் கவனித்திருக்கிறார்கள்? வார்த்தையில் போஷிக்கப்படுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிற செய்தியை எத்தனைபேர் கேட்டிருக்கிறார்கள்?

ஆனால் தேவனுடைய வார்த்தை தேவனுடைய பிள்ளை களைப் போஷிப்பதற்கான உணவு என்பதே அப்போஸ்தலனாகிய பவுலின் கருத்தாக இருந்தது. நாம் வார்த்தையில் போஷிக்கப்படவேண்டும், வெறுமனே போதிக்கப்படக்கூடாது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம், போஷிக்கப்படவேண்டும்! அல்லேலூயா, நாம் வார்த்தையைக் கொண்டு போஷிக்கப்பட வேண்டும், வெறும் எழுத்துக்களைக் கொண்டு போதிக்கப்படக் கூடாது! பவுலுடைய வலியுறுத்துதல் நாம் அறிவைக்கொண்டு போதிக்கப்படவேண்டும் என்பதல்ல, மாறாக வார்த்தையின் செல்வங்களைக்கொண்டு போஷிக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.

நாம் வேதவாக்கியங்களை வாசிக்க வரும்போது நம் நோக்கம் என்ன? ஏதோவொன்றை அறிந்துகொள்ளவேண்டும், கற்றுக்கொள்ளவேண்டும் அல்லது புரிந்துகொள்ளவேண்டும் என்பதுதானே பல வருடங்களாக நம் நோக்கமாக இருந் திருக்கிறது? வேதாகமம் ஒருவிதமான போதனை, அதாவது

உபதேசங்களால் நிறைந்த ஒரு புத்தகம் என்பதுதான் நம் கருத்தாக இருந்திருக்கிறது. எனவே நாம் ஏதோவொன்றைப் புரிந்துகொள்ளவும் அறிந்துகொள்ளவும் தீர்மானித்து, வார்த்தையிடம் வந்தோம். இருப்பினும், நாம் தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்வதற்கு நம் பரம்புதிரான புரிந்து கொள்ளுதலுடன் நம் அற்புதமான மனதை மட்டும் பயன் படுத்தக்கூடாது. நாம் இதைப்பற்றி மறந்துவிடவேண்டும். நாம் மிக அதிகமாக நம் மனதை மதிப்படவும், நம் புரிந்து கொள்ளுதலைப் பாராட்டவும் கூடாது. நாம் ஜெப-வாசிப்பு செய்வதற்கு நம் ஆவியைப் பயிற்சிசெய்ய எளிமையாக வார்த்தையிடம் வருகிற குருடர்களாக, முட்டாள்களாகவும்கூட இருக்கவேண்டும். பழைய, பாரம்பரிய வழியைக்குறித்து மறந்துவிடுங்கள்!

எப்படி ஜெப-வாசிப்புசெய்வது என்பதை நாம் அறிய வில்லையென்றால், நாம் இப்படியாக ஜெபிப்போம்: முதலாவது நாம் ஜெபிக்கவேண்டும் என்று உணர்ந்து அதிகாலையில் எழும்புவோம். அதன்பின் இதுபோல ஜெபிக்க முயற்சிசெய்வோம்: "கர்த்தாவே, நீர் மிகவும் நல்லவர்...நீர் எனக்கு சமாதானத்தைக் கொடுத்திருக்கிறீர்...எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் நீர் என்னைப் பாதுகாத்திருக்கிறீர்... என்பதற்காக நான் உமக்கு நன்றிசெலுத்துகிறேன்...." பிறகு நாம் எங்கோ பயணம்செய்யப்போகிறோம் என்பதை உடனே நினைக்கிறோம்: "ஆ, நான் பயணம்செய்யப்போகிறேன்.... கர்த்தாவே, பயணம்செய்யும் இரக்கங்களை...விபத்திலிருந்து... பாதுகாப்பை...எனக்குத் தாரும்...." இன்னும் தயங்கினபிறகு, "எனக்கு வியட்னாமில் ஒரு நண்பன் இருக்கிறான்..." என்று தொடர்கிறோம், "கர்த்தாவே, அவனை நினைவுகூரும்... வியட்னாமில் உள்ள ஜேம்ஸ்...மேற்கு ஜெர்மனியில் உள்ள டாமையும் நினைவுகூரும்...கர்த்தாவே, டாம் அங்கு இருக்கிறான்...அவனுக்கு உம் பாதுகாப்பு தேவை...."

நாம் நேர்மையாக பதில்சொல்லவேண்டும். இவ்விதமான ஜெபம் நமக்கு என்ன செய்கிறது? இப்படித்தான் பெரும் பாலான கிறிஸ்தவர்கள் ஜெபிக்கிறார்கள். ஆனால் அவர்கள் எந்தப் போஷாக்கையாவது பெற்றுக்கொள்கிறார்களா? அவர்களை உள்ளே மகிழ்ச்சியினாலும், வெளியே களிகூருதலினாலும் நிறைந்திருக்கும்படிச்செய்கிற ஏதோவொன்றை அவர்கள் ஆதாயப்படுத்துகிறார்களா? இல்லை!

இதுவே சரியான வழி: முதலாவது ஜெப-வாசிப்பு செய்யும்படி வேதாகமத்திடம் வாருங்கள். உங்கள் கண்களை மூடிக்கொள்ளவேண்டிய தேவையில்லை. நீங்கள் ஜெபிக்கும் போது உங்கள் கண்களை வார்த்தையின்மீது வைத்திருங்கள்.

நாம் நம் கண்களை மூடி ஜெபிக்கவேண்டும் என்று கூறுகிற ஒரு வசனத்தைகூட வேதாகமத்தின் அறுபத்தாறு புத்தகங்களிலும் நாம் கண்டுபிடிக்கமுடியாது. ஆனால் இயேசு வானங்களை ஏறெடுத்துப் பார்த்து, "பிதாவே..." என்று சொன்னார் என்று கூறுகிற வசனம் உண்டு (யோவான் 17:1-2). அவர் ஜெபித்தபோது வானத்தைப் பார்த்துக்கொண் டிருந்தார்! நாம் உபதேசத்துக்குரிய விதத்தில் வாக்குவாதம்பண்ணமாட்டோம், ஆனால் நாம் ஜெபிப்பதற்கு நம் கண்களை மூடிக்கொள்ள தேவையில்லை என்பதை உணரவேண்டும். "ஆதியிலே..." என்று சொல்லுகிற அச்சிடப்பட்ட பக்கத்தை வெறுமனே பாருங்கள். அதன்பின் உங்கள் கண்களை வார்த்தையின்மீது வைத்து, ஆழத்திலிருந்து ஜெபித்து, இவ்வாறு சொல்லுங்கள்: "ஆ, கர்த்தாவே, 'ஆதியிலே!' கர்த்தாவே, நான் உம்மைத் துதிக்கிறேன் 'ஆதியிலே வார்த்தை இருந்தது.' வார்த்தை என்ன என்பதை நான் அறியாவிட்டாலும், வார்த்தை இருந்தது. கர்த்தாவே, நான் உம்மைத் துதிக்கிறேன்! 'ஆதியிலே!' அல்லேலூயா! 'ஆதியிலே!' ஆ, கர்த்தாவே, 'ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.'" வெறுமனே இவ்விதமாக ஜெபிக்க முயற்சிசெய்யுங்கள். ஒருவேளை நீங்கள் இன்னொரு வசனத்திற்குத் திரும்பலாம். "ஆனபடியால், இப்போது ஆக்கினைத்தீர்ப்பில்லை." "ஆ, கர்த்தாவே, 'இப்போது ஆக்கினைத்தீர்ப்பில்லை.' ஆ, கர்த்தாவே, 'இப்போது ஆக்கினைத்தீர்ப்பில்லை.' ஆமென். 'இப்போது.' ஆ, கர்த்தாவே. 'இப்போது.' ஆமென்! 'இப்போது ஆக்கினைத் தீர்ப்பில்லை.' கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! 'ஆக்கினைத்தீர்ப்பில்லை.'"

நாம் ஜெப-வாசிப்புசெய்யும்போது எந்த வாக்கியங்களையும் தொகுக்கவோ, ஒரு ஜெபத்தை தயாரிக்கவோ வேண்டியதில்லை. வெறுமனே வார்த்தையை ஜெப-வாசிப்பு செய்யுங்கள். வேதாகமத்தின் வார்த்தைகளை உள்ளபடியே ஜெபியுங்கள். இறுதியாக வேதாகமம் முழுவதும் ஒரு ஜெப புத்தகம் என்பதை நீங்கள் பார்ப்பீர்கள்! "கர்த்தருடைய ஜெபம்" மட்டும் ஜெபமல்ல, வேதாகமம் முழுவதும் ஜெபமாக இருக்கிறது. வேதாகமத்தின் எந்தப் பக்கத்தையாவது, எந்த வரியையாவது, எந்த வார்த்தையையாவது திறந்து, வார்த்தையின் அந்தப் பகுதியைக்கொண்டு ஜெபிக்க ஆரம்பியுங்கள். நீங்கள் முப்பது நிமிடங்களுக்கு கர்த்தருடைய பிரசன்னத்தில் இவ்விதமாகத் தொடர்ந்து ஜெப-வாசிப்புசெய்தால், நீங்கள் எப்படிப்பட்ட பிரகாசிப்பித்தலையும் நீர்பாய்ச்சுதலையும் போஷாக்கையும் புத்துணர்வையும் பலப்படுத்துதலையும் திருப்தியையும் அடைவீர்கள் என்பதைப் பார்ப்பீர்கள். இந்த முப்பது நிமிடங்களிலிருந்து ஓர் ஆவிக்குரிய காலை உணவை நீங்கள்

பெறுவீர்கள், அது நாள்முழுவதும் நீடிக்கும்!

நீங்கள் ஒரு குறிப்பிட்ட பத்தியைப் புரிந்துகொள்ளா விட்டாலும், நீங்கள் போஷிக்கப்படுகிறீர்கள், ஏனென்றால் தேவனுடைய வார்த்தையில் நிஜமாகவே அவருக்குரிய ஏதோ வொன்று இருக்கிறது. தேவனுடைய வார்த்தை அவருடைய சுவாசமாகவே இருக்கிறது. (கிரேக்க மொழியில் 2 தீமோத்தேயு 3:16 "வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் சுவாசித்து ஊதப்பட்டிருக்கிறது," என்று இருக்கிறது.)

வேதாகமத்தைக் கற்றுக்கொள்ள மட்டுமே முயற்சிசெய்யா தீர்கள். இது ஜீவ புத்தகம், அறிவு புத்தகமல்ல என்பதை நாம் உணரவேண்டும். இந்தப் புத்தகம் ஜீவிக்கிற ஆவியானவரின் தெய்வீக ஊனுருவாக இருக்கிறது, அவர் ஜீவனாக இருக்கிறார். வெறுமனே படிப்பதோ கற்பதோ அல்ல, ஜெப-வாசிப்புசெய்யும்படி நம் ஆவியைப் பயிற்சிசெய்வதால் வார்த்தையைத் தொடர்புகொள்வதே சரியான வழியாகும். இதுதான் சரியான வழி என்று ஆயிரக்கணக்கானவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். வேதாகமத்திடம் வருகிற இந்த வழி அவர்களுடைய வாழ்வுகளைப் புரட்சிகரமாக்கியிருக்கிறது. நீங்கள் ஐந்து நாட்களுக்கு காலையில் இதை முயற்சி செய்தால், நீங்களும் மாற்றப்படுவீர்கள். வேதாகமத்தைப் பற்றிய உங்கள் முழு கருத்தும் அடியோடு மாற்றியமைக்கப் படும். முதலில் இது அவ்வளவு நன்றாக வேலைசெய்யாமல் இருக்கக்கூடும், ஆனால் பழகப் பழக நீங்கள் ஜீவிக்கிற ஆவியானவரைத் தொடுவீர்கள்.

அதிகமான அறிவும் போதனைகளும் அல்ல, போஷாக்கே இன்று சபைக்குத் தேவை; கர்த்தர் தம் சரீரத்தைப் போஷிக்கிற வழி தம் வார்த்தையினால் தான். நம்மைப் போஷித்து, நம் அனுபவமகிழ்ச்சியாக மாறுவதற்கான வழிக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறார். ஜெப-வாசிப்பு அவருக்கு அந்த வழியைத் தருகிறது. இவ்விதமான ஜெபத்தினால் கிறிஸ்துவின் எல்லா செல்வங்களும் நமக்குள் கொண்டுவரப்படும், சொல்லப்போனால், நமக்குள் கூட்டிச்சேர்க்கப்படும். எந்தப் போதனையோ, உபதேசமோ அல்லது அறிவோ இந்த அளவுக்கு கிறிஸ்துவை நமக்குள் கூட்டிச்சேர்க்கமுடியாது; இவ்விதமான ஜெபத்தினால் மட்டுமே முடியும். ஆகவே நாமெல்லாரும் இவ்விதமாக ஜெபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இறுதியாக, நாம் நம்மிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டு, கிறிஸ்துவைக்கொண்டு பூரிதமாக்கப்பட்டு, ஆவியானவரைக் கொண்டு வியாபித்து நிரப்பப்படுவோம்.

அத்தியாயம் இரண்டு

கர்த்தரைத் தொட ஓர் எளிமையான வழி

கிறிஸ்தவ நடையின் இறுதி இலக்கை அல்லது நோக்கத்தை பவுல் தன் நிருபங்களில் நமக்குத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் திரைநீக்கிக் காண்பிக்கிறார்: "அவரை அறிகிறதற்கு" (பிலி. 3:10); "எனக்கு வாழ்வதென்றால் கிறிஸ்துவே" (பிலி. 1:21); "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து" (கொலோ. 3:4). கிறிஸ்துவே கிறிஸ்தவ வாழ்க்கையின் நிஜமும் மையமுமாக இருக்கிறார் என்பதை இந்த வசனங்களின்மூலம் நாம் பார்க்கமுடியும்.

தேவனால் பிறந்து, கிறிஸ்துவைத் தங்களுக்குள் வாழ் கிறவராகக் கொண்டிருக்கிற மக்கள் என்ற முறையில் எல்லாக் கிறிஸ்தவர்களும் இனி கிறிஸ்துவைப்பற்றிப் படிப்பதில், கிறிஸ்துவுக்காக ஏதோவொன்றைச் செய்வதில் அல்லது கிறிஸ்துவை சேவிப்பதிலும்கூட முழுவதும் சிக்கிக்கொண் டிராமல், தினம்தினம் ஜீவிக்கிற வழியில் அவரைத் தொட்டு, அனுபவமாக்குகிற நிஜத்தில் இருக்கிற கட்டத்திற்கு கர்த்தருடைய இரக்கத்தினால் கொண்டுவரப்படவேண்டும். "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே," என்று ரோமர் 5:10 சாட்சியிடுகிறது. இந்த "அதிகம்" என்பது கிறிஸ்துவினுடைய அதிகமாக இருக்கவேண்டும். ஒரு கிறிஸ்தவனின் ஆரம்ப இரட்சிப்பின் அனுபவம் உண்மையாகவே அற்புதமானது. இப்போது அவன் தேவனால் பிறந்தவனாக இருக்கிறான், ஆனால் அவன் "இன்னும் அதிகமாக" கிறிஸ்துவின் ஜீவனால் இரட்சிக்கப்படவேண்டும். கிறிஸ்துவைத் தன் இரட்சகராக அறிந்த ஒவ்வொரு நபரும் "இன்னும் அதிகமான" இந்த அனுபவத்திற்குள் கொண்டுவரப்படவேண்டும், அது முழுவதும் கிறிஸ்துவின்மீது மையங் கொண்டுள்ள ஒரு வாழ்க்கையின் நிறைவுக்குள்ளாகவும் நிஜத்திற்குள்ளாகவும் நுழைவதாகும், அதாவது ஒவ்வொரு கணப்பொழுதும் அவரை அனுபவமாக்கி, தொட்டு, அனுபவித்துமகிழ்வதாகும்.

மீட்பை நிறைவேற்றுதல்

இன்று எல்லாக் கிறிஸ்தவர்களும் தம்மை முழுமையான,

ஜீவனுள்ள வழியில் தொடர்புகொண்டு, அனுபவமாக்கும்படி கர்த்தர் தம்மை எளிதாகக் கிடைக்கப்பண்ணியிருக்கிறார். தொடக்கத்தில் இயேசுகிறிஸ்து தேவனாக இருந்தார் என்று வேதாகமம் நமக்கு வெளிப்படுத்துகிறது (யோவான் 1:1). அதன்பின் ஒரு நாள் இந்த தேவன்தாமே பூமியில் தங்கி வாழவும் (யோவான் 1:14), எல்லாருக்காகவும் மீட்பை நிறைவேற்றவும் மனிதனாக மாறினார். அவருடைய இரத்தஞ் சிந்துதலின்மூலம் நாம் மீட்பில் பங்குபெற்று (எபே. 1:7), தேவனோடு ஒப்புரவாக்கப்படும்படி அவர் தேவ ஆட்டுக்குட்டி யாக நம்மிடையே இருந்தார். மெய்யாகவே இது மகிமையானது! கிறிஸ்து ஒரு மனிதனாக மாறி, பூமியில் முப்பது மூன்றரை வருடங்கள் வாழ்ந்து, எல்லாருக்காகவும் மீட்பை நிறைவேற்றினார். இருப்பினும் கிறிஸ்து இதோடு நிறுத்தியிருந்தால், இதுவே நம் கிறிஸ்தவ அனுபவத்தின் கூட்டுமொத்தமாக இருக்கும். எல்லாரும் பாவங்களின் மன்னிப்பை அனுபவித்துமகிழமுடியும், ஆனால் ஒருவரும் *ஜீவனால்* இரட்சிக்கப்பட முடியாது. அனுதின, நடைமுறைக்குரிய வழியில் ஒருவரும் அவரைத் தொடவும் அனுபவமாக்கவும் முடியாது. அப்படியானால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த "இன்னும் அதிகமான" அனுபவத்திற்குள் நுழையும்படி கிறிஸ்து என்ன செய்தார்? அவர் சிலுவையிலறையப் பட்டு, பிறகு அடக்கம்செய்யப்பட்டது *மட்டும்தானா*? அதுதான் முடிவா? இன்னும் அதிகம் இருக்கிறது என்பதற்காக நாம் அவரைத் துதிக்கவேண்டும்!

ஜீவன்தரும் ஆவியானவர்

அவர் தம் சீடர்கள்*மத்தியில்* இருந்தார், ஆனால் அவர் அவர்களு*க்குள்* இருக்கப்போகிறார் என்று அவருடைய சிலுவைமரணத்திற்கு சற்றுமுன்பு தம் சீடர்களிடம் கூறினார் (யோவான் 14:16-20). இது எப்படி நிறைவேற்றப்படமுடியும்? இயேசு மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, அது மட்டுமே முடிவாக இருந்திருந்தால், அவர் ஒருபோதும் தம் சீடர்களுக்குள் நுழைந் திருக்கவோ, இன்று தம் மக்களுக்குள் நுழையவோ முடியாது. ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் அடக்கம் பண்ணப்பட்டு மூன்று நாட்களுக்குபின்பு, அவர் மரணத்தின் கட்டுகளை உடைத்தெறிந்து, மரித்தோரை விட்டு எழுப்பப்பட்டார். எனவே நாம் கேள்விகேட்போம்: இன்று அவர் என்ன உருவத்தில் இருக்கிறார்? அவர் ஆவியானவராக இருக்கிறார்! "பிந்தின ஆதாம் [கிறிஸ்து] உயிர்ப்பிக்கிற ஆவியானார்" (1 கொரி. 15:45).

இயேசு தாம் தம் சீடர்களுக்குள் நுழைவதாக அவர்களிடம் சொல்லியிருந்தார்; ஆகவே, அவர் தம் உயிர்த்தெழுதலுக்கு சற்றுபின்பு, கதவுகள் அடைக்கப்பட்டிருந்த அறையில்

அவர்களுக்குமுன்பாகத் தோன்றினார். அவர் ஆவியானவராக இல்லாவிட்டால், அவர் இதைச் செய்திருக்கவே முடியாது. அங்கு அவர் "அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்றார் (யோவான் 20:22). அவர்கள்மத்தியிலும் அவர்களுக்கு வெளியிலும் இருந்த இயேசு அந்த கணப்பொழுதில் அவர்களுக்குள் வந்தார். கிறிஸ்து ஆவியானவராக இல்லை யென்றால் அவர் தம் சீடர்களுக்குள் நுழைந்திருக்கவே முடியாது. "கர்த்தரே ஆவியானவர்" (2 கொரி. 3:17); தேவனோடு ஒப்புரவாக்கப்பட்ட எல்லாரும் இந்த ஜீவன்தரும் ஆவியானவரைத் தங்கள் உதாரத்துவமான நிரப்பீடாகவும் தங்களுக்குத் தேவையான எல்லாமாகவும் தங்களுக்குள் குடியிருப்பவராகக் கொண்டிருக் கிறார்கள். கிறிஸ்து ஆவியானவராக மாறி, ஒவ்வொரு கிறிஸ்த வனுக்குள்ளும் நுழைந்திருப்பதால், இப்போது அவர் அவர்களுக்கு மிக எளிதாகக் கிடைக்கிறார்; அவர்கள் அவரைத் தொடர்பு கொள்வதும், அனுபவமாக்குவதும், அனுபவித்து மகிழ்வதும்கூட மிகவும் சுலபம். "நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே."

கர்த்தரை நோக்கிக் கூப்பிடுதல்

கிறிஸ்து ஒரு மனிதனாக மாறி, நமக்காக மீட்பை நிறைவேற்றி, ஆவியானவராக மாறி, இப்போது நம் ஜீவனாகவும் நமக்கு எல்லாமாகவும் இருக்கும்படி நமக்குள் நுழைந்திருக்கிறார் என்ற இவையாவும் மெய்யாகவே அற்புதமானது, அற்புதங்களுக் கெல்லாம் அற்புதமாக இருக்கிறது; ஆனால் இப்போது நாம் எழுப்ப வேண்டிய கேள்வி இதுதான்: ஒவ்வொரு கணப்பொழுதும் நம் ஜீவனாகவே நடைமுறைக்குரிய விதத்தில் நாம் எப்படி கிறிஸ்துவை தொட்டு, அனுபவமாக்கமுடியும்? கர்த்தர் நமக்கு ஓர் எளிமையான வழியைத் தந்திருக்கிறார். நாம் செய்யவேண்டிய தெல்லாம் அவரைநோக்கிக் கூப்பிடுவதே, ஜீவன்தரும் நிரப்பீடாகிய அவரை நாம் தொடுவோம். "எல்லாருக்குங் கர்த்தரானாவர் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" என்று ரோமர் 10:12-13ல் வேதாகமம் சொல்லுகிறது. இந்த வசனங்கள் ஆரம்ப இரட்சிப்பின் அனுபவத்திற்கு மட்டுமே பிரயோகிக்கப்படக்கூடும் என்ற கருத்து கடந்தகாலத்தில் நமக்கு இருந்திருக்கலாம்; இருப்பினும் பாவம், சுயம், மனுஷிக பலவீனம், மற்ற எதிர்மறையான காரியங்களிலிருந்தும் அனுதின இரட்சிப்பு ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தேவை. நேர்மறையான பக்கத்தில் அவன் எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்குள்ளாக வளரும்படி அவனைப் போஷித்து, பலப்படுத்த கர்த்தருடைய உதாரத்துவமான

நிரப்பீடும் அவனுக்குத் தேவை. இதை நிஜமாக்குவதற்குள்ளான வழி கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதே ஆகும். அவர் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராக இருக்கிறார். தூய்மையான இருதயத்தோடு *கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுடன் கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்படி 2 தீமோத்தேயு 2:22*-ல் பவுல் தீமோத்தேயுவை உந்தித்தள்ளுவதை நாம் பார்க்கிறோம்.

தேவனால் தீர்மானிக்கப்பட்டபடி, ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவை அனுபவிப்பது, ஒரு விசுவாசிக்கு நிஜமாகவும் உலகத்தில் உள்ளவர்களுக்கு சாட்சியாகவும் இருக்கவேண்டும். ஆதி கிறிஸ்தவர்களின் சாட்சி என்ன? இதுதான்: அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிற மக்களாக இருந் தார்கள். நடபடிகள் *9:14*-ல் இது நமக்குக் காண்பிக்கப்படுகிறது, கர்த்தருடைய பெயரை நோக்கிக் *கூப்பிட்ட* எல்லாரையும் பவுல் தன் மனமாற்றத்திற்கு முன்பாக சித்திரவதைப்படுத்தினான் என்று அது கூறுகிறது. *அவருடைய* பெயரை நோக்கிக் *கூப்பிடுகிற எல்லாரையும்* கட்டும்படி பிரதான ஆசாரியர்களிடமிருந்து அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆதி கிறிஸ்தவர்கள் எல்லா இடத்திலும் கர்த்தருடைய பெயரை நோக்கிக் கூப்பிட்டவர்கள் என்பதை *1* கொரிந்தியர் *1:2* நமக்குக் காண்பித்து இதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

இன்று அநேகக் கிறிஸ்தவர்கள் எளிமையான, நடைமுறைக் குரிய விதத்தில் அனுதினமும், ஒவ்வொரு மணிநேரமும், ஒவ்வொரு கணப்பொழுதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதை நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு வேண்டிய எல்லாமுமாக இருப்பதையும், உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெறுமனே அவரை நோக்கிக் கூப்பிடுவதால் எந்த நேரத்திலும் எந்த சூழ்நிலையிலும் அவரைத் தொட்டு, அவரோடு ஐக்கியங்கொள்ளமுடிகிறது என்பதையும் அவர்கள் தங்கள் மகிழ்ச்சிக்கேதுவாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவது புறம்சார்ந்த முறையில் இருக்கக்கூடாது, அதாவது பரலோகங்களில் இருக்கிற கிறிஸ்துவை நோக்கிக் கூப்பிடுகிறதாக அல்ல, மாறாக ஆவியானவராக இருக்கிறவரும், நம் ஆவியில் குடியிருக்கிறவருமான கிறிஸ்துவை நோக்கிக் கூப்பிடுகிறதாக இருக்க வேண்டும் *(2 தீமோ. 4:22)*. உள்ளத்தின் ஆழத்திலிருந்து அவரை நோக்கிக் கூப்பிடுவதால் நம்முள் கிறிஸ்துவின் பாய்ந்தோடுதலையும் ஐக்கியத்தையும் உணர்வோம்.

உண்மையான ஆராதனை

"உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை

ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்" (யோவான் 4:23-24). இந்த உண்மையான ஐக்கியத்தின் ஆராதனை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நிலையானதாகவும், ஜீவன் தருகிறதாகவும் இருக்கும்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த வசனங்களில் உள்ள உண்மையான ஆராதனை என்பது குறிப்பிட்ட விதிமுறைகள், சம்பிரதாயங்கள், சடங்காச் சாரங்கள், ஒழுங்குமுறைகள் ஆகியவைகளில் பங்குபெறுவதும், அவைகளைக் கைக்கொள்வதும் அல்ல, மாறாக உள்ளத்தின் ஆழத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, சத்தியமும் நிஜமுமாகிய இயேசுகிறிஸ்துவைத் தொடர்பு கொள்வதும், அவரோடு ஐக்கியங்கொள்வதும் ஆகும். நாள் முழுவதும் ஒவ்வொரு நாளும் தம் குமாரனைத் தொட்டு, அவரோடு ஐக்கியங்கொள்கிற இந்த உண்மையான ஆராதனையை அனுபவித்துமகிழ்ந்து, அதில் பங்குபெறுவதே நம்மைக்குறித்து பிதாவின் விருப்பமாக இருக்கிறது. வேலையிலோ, வகுப்பறையிலோ, கார் ஓட்டும்போதோ, நண்பருடன் பேசும்போதோ, மற்ற கிறிஸ்தவர்களுடன் கூட்டங்களிலோ அவருடைய விருப்பம் என்னவென்றால், நாம் நம் கர்த்தரைத் தொடர்புகொண்டு, அவரோடு ஐக்கியங்கொள்வதே ஆகும்.

நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, ஆவியிலும் உண்மைத்தனத்திலும் அவரை ஆராதிக்கவேண்டும் என்று அவர் நமக்குக் கூறினது மட்டுமல்லாமல், இந்த உண்மை யான ஆராதனையில் அவரைத் தொடுவதற்கான மிக நடைமுறைக்குரிய, எளிமையான வழியையும் அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார் என்பதற்காக நாம் அவரை மீண்டும் துதித்து, ஸ்தோத்திரிக்க வேண்டும். நாம் எளிமையாக கர்த்தருடைய நாமத்தை நோக்கிக் கூப்பிடுவதால் ஆராதனையில் அவரைத் தொட்டு, அனுபவமாக்கமுடியும் என்பதை நமக்குக் காண்பிக்க வேதாகமம் நமக்குத் தெளிவான உதாரணங்களைத் தருகிறது. "அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே!...என்றான்," என்று மத்தேயு 8:2-ல் நாம் வாசிக்கிறோம். "அவள் வந்து: ஆண்டவரே...என்று அவரைப் பணிந்து கொண்டாள்," என்று மத்தேயு 15:25-ல் வாசிக்கிறோம்.

எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், எந்த சூழ்நிலையிலும் நாம் உண்மையான ஆராதனையில் பங்குபெறமுடியும் என்பதைப் பார்க்க இந்த வசனங்கள் நமக்கு உதவுகின்றன. நம் தற்போதைய

சூழ்நிலை என்னவாக இருந்தாலும், “ஆ கர்த்தாவே, ஆ கர்த்தாவே,” என்று நாம் எளிமையாக ஜெபிப்ப தால் அவரை ஆராதிக்கமுடியும். அநேகக் கிறிஸ்தவர்கள் தாங்கள் சோதிக்கப்படும்போது அல்லது துயரமடைந்திருக்கும் போது அல்லது “மயக்கநிலையில் இருக்கும்போது” “ஆ கர்த்தாவே” என்று எளிமையாக அவருடைய பெயரை சுவாசிப்பது கர்த்தரை நிஜமாகத் தொடுவதற்குள்ளாகவும், அவருடனான ஐக்கியத்திற்குள்ளாகவும், சுயம், பாவம், உலகம் ஆகியவைகளிலிருந்து முழுமையான விடுதலைக் குள்ளாகவும் தங்களைக் கொண்டுவருகிறது என்பதைக் கண்டு கொள்கிறார்கள். நாம் இவ்விதமாக உள்ளத்தின் ஆழத்தி லிருந்து கர்த்தரை நோக்கிக் கூவி அழைக்கும்போது கிறிஸ் துவையும் நம்முள் பாய்ந்தோடுகிற, அசைகிற அவருடைய ஜீவனையும்பற்றிய உள்ளான ஆழமான உணர்வு நமக்கு இருக்கிறது. சங்கீதங்களில் சங்கீதக்காரர்கள் கர்த்தரிடம் ஜெபித்தபோது நூற்று எண்பது முறைக்கும்மேலாக “கர்த்தாவே” என்று கூவி அழைத்ததை நாம் காண்கிறோம். “முழு இருதயத்தோடும் கூப்பிட்டேன், கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும்,” என்று ஒரு சங்கீதக்காரன் ஓர் இடத்தில் கூறினான் (சங். 119:145). “அப்பொழுது நான் கர்த்தருடைய நாமத்தை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே,” என்று இன்னோர் இடத்தில் ஒருவன் கூறினான் (சங். 116:4). கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவது மெய்யாகவே லேசான காரியம் அல்ல, இருப் பினும் அது மிக எளிமையானதும், நடைமுறைக்குரியதும் ஆகும். இந்த வழியில் அனுதினமும் கணந்தோறும் நம் உள்ளான திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவும் கிறிஸ்துவை நாம் தொட்டு, அனுபவமாக்கமுடியும்.

வெளிப்படுத்தின விசேஷம் 19:4-ல் உண்மையான ஆராதனையைப்பற்றிய இன்னோர் எடுத்துக்காட்டை வேதா கமம் தருகிறது: “இருபத்துநான்கு மூப்பர்களும், நான்கு ஜீவன்களும் வணக்கமாய் விழுந்து: ஆமென், அல்லேலூயா, என்று சொல்லி, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் தேவனைத் தொழுது கொண்டார்கள்.” “எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாக்கும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே,” என்று 2 கொரிந்தியர் 1:20 கூறுகிறது. மேலும் “ஆமென்” என்பது கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட இன்னொரு பெயர் என்று வெளிப்படுத்தின விசேஷம் 3:14-ல் நாம் பார்க்கிறோம். உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆமென் என்று நாம் கூவி அழைக்கும்போது, “ஆ கர்த்தாவே, ஆ கர்த்தாவே,” என்று அழைத்தபோது நாம் கிறிஸ்துவைத் தொட்டதாக உணர்ந்தது போலவே உணர்கிறோம், ஏனென்றால் அவருடைய பெயர் கர்த்தர் என்பதுபோல, ஆமென் என்பதும் அவருடைய பெயராக

இருக்கிறது. நாம் "ஆமென்" என்று அழைப்பது கர்த்தருக்கு நிஜமான துதியாக இருக்கிறது என்று 1 நாளாகமம் 16:36-ல் பார்க்கிறோம்: "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குச் சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக; அதற்கு ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லிக் கர்த்தரைத் துதித்தார்கள்." உள்ளத்தின் ஆழத்திலிருந்து "ஆமென்" என்று நாம் கூவி அழைப்பது கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதும், அவரைத் தொடுவதும் ஆகும்.

அல்லேலூயா என்றால் "கர்த்தரைத் துதியுங்கள்," அதாவது "யெகோவாவைத் துதியுங்கள்," என்று அர்த்தம்; சங்கீதக்காரன் தேவனுக்கான தன் ஆராதனையிலும் துதியிலும் மீண்டும் மீண்டும் அல்லேலூயாவைப் பயன்படுத்தினான். கடைசி ஐந்து சங்கீதங்களும் இந்தப் பரலோக ஆராதனையின் வார்த்தை யுடன் ஆரம்பித்து, முடிவடைகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 19:1, 3, 4, 6-லும் தேவனுக்கான ஆராதனையில் இந்த வார்த்தை ஏறெடுக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். இன்றும் அப்படித்தான். அதே எளிமையான வழியில் நாம் நம் கர்த்தரை ஆராதித்து, அவரோடு ஐக்கியங்கொள்ளலாம். "ஆ கர்த்தாவே! ஆமென்! அல்லேலூயா!" என்று உள்ளத்தின் ஆழத்திலிருந்து நாள்முழுவதும் நாம் கூவி அழைக்கலாம்.

சுருக்கமாகச் சொன்னால், தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்து, மனித வாழ்க்கை வாழ்ந்து, நம் பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டு, அடக்கம்பண்ணப்பட்டு, மீண்டும் எழும்பி, ஜீவன்தரும் ஆவியானவராக மாறினார். நாம் அவருக்குள் விசுவாசித்த போது, அவர் நம் ஜீவனாகவும் நமக்கு எல்லாமாகவும் இருக்கும்படி நம் ஆள்தத்துவத்தின் மிக ஆழமான பகுதியாகிய நம் ஆவிக்குள் ஆவியானவராக வந்தார். இன்று ஆவியானவராக அவர் நமக்குக் காற்றைப்போல இருக்கிறார், மிகப் பசுமையாகவும் மிக எளிதில் கிடைக்கிறவராகவும் இருக்கிறார். "ஆ கர்த்தாவே!" அல்லது "ஆமென்!" அல்லது "அல்லேலூயா!" என்று நாம் கூவி அழைக்கும்போது, அவருடைய எல்லா ஐசுவரியங்களையும்கொண்டு நம்மை நிரப்புகிற, ஜீவன்தரும் சுவாசமாக அவரை நமக்குள் எடுத்துக்கொள்கிறோம். இன்று நம் ஜெபமாகவும் தேவனுக்குத் துதியாகவும் இந்த நான்கு வார்த்தைகளை நாம் சுவாசிக்க வேண்டும். உள்ளத்தின் ஆழத்திலிருந்து "ஆ கர்த்தாவே," "ஆமென்," "அல்லேலூயா," என்று சுவாசியுங்கள், கிறிஸ் துவின் இனிமையையும் நிஜத்தையும் நீங்கள் சுவைப்பீர்கள். அவருடைய ஜீவன் மெய்யாகவே இரட்சிக்கிற ஜீவன் என்பதை நீங்கள் அதிகமதிகமாக உணர ஆரம்பிப்பீர்கள். "ஆ கர்த்தாவே! ஆமென்! அல்லேலூயா!" என்று

கணந்தோறும் அழைப்பதினால் தாங்கள் அவரை அறியமுடிகிறது என்றும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமைக்குள் கொண்டுவரப் படமுடிகிறது என்றும், அவருடைய தானியங்கும் இரட்சிப்பை அனுபவமாக்கமுடிகிறது என்றும், அவரோடு ஒருமையில் நடக்கமுடிகிறது என்றும் இன்று அநேகக் கிறிஸ்தவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அத்தியாயம் மூன்று

ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது

வேத வாசிப்பு: சங். 42:7; மாற்கு 4:5-6; ஏசா. 39:1-6; 2 கொரி. 12:1-4; அப். 5:1-5

"ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது," என்று சங்கீதம் 42:7 கூறுகிறது. ஆழங்களிலிருந்து வரும் ஓர் அழைப்பு மட்டுமே ஆழங்களில் ஒரு மாறுத்தரத்தைத் தூண்டமுடியும். ஆழமற்ற ஒன்றும் ஆழங்களைத் தொடமுடியாது, அல்லது மேலோட்ட மான எதுவும் உள்ளான பகுதிகளைத் தொடமுடியாது. ஆழம் மட்டுமே ஆழத்திற்கு பதில்கொடுக்கும். ஆழங்களிலிருந்து வராத எதுவும் ஆழங்களைத் தொடமுடியாது. நம்முள் ஆழத்திலிருந்து வருகிறது எதுவோ அதற்கு மட்டுமே மற்றவர்கள் ஆழத்தில் பதில்கொடுக்கமுடியும். நாம் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போய், ஒரு செய்தியைக் கேட்கும்போது, மற்றவர்களுடைய ஆழங்களிலிருந்து வந்த ஒன்று மட்டுமே நம்மைத் தொடுகிறது. ஆழங்களிலிருந்து ஒன்றும் வரவில்லை என்றால், நாம் பெறுகிற உதவி மேலோட்ட மானது தான். ஆழங்களின் முக்கியத்துவத்தை நாம் பார்க்கவேண்டும். ஆழங்களிலிருந்து வராத எதுவும் மற்றவர் களுடைய ஆழங்களை ஒருபோதும் போய்ச்சேராது. நாம் நம் ஆழங்களில் உதவியை அல்லது லாபத்தை ஒருபோதும் பெறவில்லை என்றால், நம் ஆழங்களிலிருந்து வருகிறதாக நம்மிடம் ஒன்றும் இருக்காது. நாம் மற்றவர்களுக்கு ஆவிக்குரிய உதவியை அளிக்க விரும்பினால், நம் ஆழங்களிலிருந்து ஏதோவொன்று வெளிவரவேண்டும். நாம் ஆழமாகத் தோண்டாவிட்டால், நாம் ஒருபோதும் மற்றவர்களை ஆதாயப்படுத்தமுடியாது. நம் பேச்சு ஆழங்களிலிருந்து வராவிட்டால், நாம் மற்றவர்களுடைய உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் ஆதாயப்படுத்தி, கொஞ்சம் நேரத்திற்கு அவர்களை அழவோ அல்லது சந்தோஷமாக இருக்கவோ அல்லது கிளர்ச்சியடையவோ செய்தாலும், நாம் அவர்களில் உள்ள ஆழங்களைத் தொடமாட்டோம். ஆழம் மட்டுமே ஆழத்தைக் கூப்பிடுகிறது. மேலோட்டமான சொற்கள் மற்றவர்களுடைய ஆழங்களைத் தொடாது.

ஆழமான வேர்கள்

வசனத்தைப் பிரசங்கிப்பதிலும் பெற்றுக்கொள்வதிலும் உள்ள ஒரு கோட்பாடு விதைப்பவனைப்பற்றிய கர்த்தருடைய உவமையில் காணப்படுகிறது. விதைப்பவன் விதைத்தபோது, சில விதைகள் வழியருகேயும், சில விதைகள் பாறையான இடத்திலும், சில விதைகள் முட்களுக்குள்ளும், சில விதைகள் நல்ல நிலத்திற்குள்ளும் விழுந்தன. மனிதன் வசனத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நான்கு வெவ்வேறு வழிகளை இது நமக்குக் காண்பிக்கிறது. இந்த வெவ்வேறு நிலைமைகளுள் ஒன்று பாறையான இடம் என்று கர்த்தராகிய இயேசு கூறு கிறார். மேற்பரப்பில் கொஞ்சம் நிலம் இருக்கிறது, ஆனால் அடியில் பாறைகள் இருக்கின்றன. இவ்வகையான நிலத்திற்குள் விதை விழும்போது, அது வேகமாக துளிர்க்கிறது, ஆனால் சூரியன் வந்தவுடனே அது உலர்ந்துபோகிறது, ஏனென்றால் அதற்கு வேர் குறைவுபடுகிறது.

வேர் என்றால் என்ன? அது நிலத்திற்கு அடியில் நிகழும் வளர்ச்சி. இலைகள் என்றால் என்ன? அவைகள் நிலத்திற்கு மேலே நிகழும் வளர்ச்சி. வேறு விதமாகச் சொன்னால், வேர்கள் மறைவான வாழ்க்கையாகும், ஆனால் இலைகள் வெளியரங்கமான வாழ்க்கையாகும். அநேகக் கிறிஸ்தவர்களிடத்தில் உள்ள பிரச்சினை என்னவென்றால், வெளிப்படையான வாழ்க்கை அதிகமாக இருக்கிறது, ஆனால் இரகசியமான வாழ்க்கை மிகக் கொஞ்சமாகவே இருக்கிறது. வேறுவிதமாகச் சொன்னால், மறைவான வாழ்க்கை குறைவுபடுகிறது. நீங்கள் அநேக வருடங்களாக கிறிஸ்தவராக இருக்கிறீர்கள் அல்லவா? அப்படியானால் நான் இதைக் கேட்கிறேன்: உங்களுடைய வாழ்க்கை எந்த அளவு பார்வைக்கு மறைவாயிருக்கிறது? எந்த அளவுக்கு அது மற்றவர்களுக்கு அறியப்படாமல் இருக்கிறது? நீங்கள் புறம்பான வேலை வலியுறுத்துகிறீர்கள். ஆம், நற்கிரியைகள் முக்கியம்தான்; ஆனால் உங்கள் வாழ்க்கையின் அந்த வெளிப்படையான வெளியாக்கத்தைத் தவிர்த்து, உங்கள் வாழ்க்கை எந்த அளவிற்கு இன்னும் மறைவாக இருக்கிறது? உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை யாவும் வெளிப்பட்டுவிட்டது என்றால், உங்களிடம் எந்த வேரும் இல்லை. தேவனுக்குமுன்பாக உள்ள உங்கள் நற்பண்புகள் யாவும் மனிதனுக்குமுன்பாக வெளிப்பட்டிருக்கிறதா, அல்லது மனிதன் அறியாத இன்னும் அதிகமாக ஏதோவொன்று இருக்கிறதா? உங்கள் அனுபவங்கள் எல்லாம் வெளிப்பட்டுவிட்டது என்றால், அப்போது உங்கள் வளர்ச்சி எல்லாம் மேல்நோக்கி இருக்கிறது; கீழ்நோக்கிய வளர்ச்சி இல்லை. இதுதான் நிலைமை என்றால், நீங்கள் வேர் இல்லாமல்

இலைகளை மட்டும் உடைய ஒரு நபராக இருக்கிறீர்கள், நீங்கள் ஆழமற்ற நிலத்தில் இருக்கிறீர்கள்.

நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அர்த்தத்தை நாம் கற்றுக்கொள்வது அவசியம்; நாம் சரீரத்தின் வாழ்க்கையை வாழ கற்றுக்கொள்ளவேண்டும். மறுபக்கத்தில், கர்த்தரால் தம் சரீரத்தின் ஒவ்வோர் அவயவத்திற்கும் கொடுக்கப்பட்ட ஜீவன் வேறுபட்டவிதத்தில் தனிநபருக் குரியது என்பதை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். அவரால் உங்களுக்குத் தனிப்பட்டவிதத்தில் கொடுக்கப்பட்ட அளவு பாதுகாக்கப் படவேண்டும்; இல்லாவிட்டால், அது தன் குறிப்பிட்ட குணத்தை இழந்து, தேவனுக்கு எந்தக் குறிப்பிட்ட பயனும் அற்றதாக இருக்கும். உங்களுக்கு விசேஷமாக ஒப்படைக்கப்பட்டது வெளிப்படுத்தப்பட்டது என்றால், அது உலர்ந்துபோய்விடும்.

மலையின்மீது கர்த்தராகிய இயேசுவின் உரையாடல் மிகவும் குறிப்பிடத்தக்கது. ஒருபக்கத்தில், "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது," என்று அவர் கூறினார் (மத். 5:14). இது திறந்திருக்கிறது. மறுபக்கத்தில், "நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது. நீயோ ஜெபம்பண்ணும் போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு," என்று அவர் கூறினார் (மத். 6:3, 6). ஒருபக்கத்தில், நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்றால், நீங்கள் பகிரங்கமாக வந்து, வெளிப்படையாக அறிக்கைசெய்யவேண்டும்; மறுபக்கத்தில், கிறிஸ்தவ நற்பண்புகளை வெளிப்படையான பார்வையிலிருந்து நீங்கள் விலக்கிக் காக்கவேண்டும். மனிதர்களுக்குமுன்பாக தன் நற்பண்புகளை அணிவகுத்து, தன் ஆள்தத்துவத்தின் ஆழத்தில் எதையும் கொண்டிராத கிறிஸ்தவனுக்கு எந்த வேரும் இல்லை; பரீட்சையும் சோதனையுமான நாளில் அவனால் தாக்குப்பிடித்து நிற்கமுடியாது.

நாம் அநேக வருடங்களாக கர்த்தருடைய பிள்ளைகளாக இருந்திருக்கிறோம்; எந்த அளவுக்கு நம் அனுபவங்கள் வெளிப்படையான பார்வைக்கு மறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை கர்த்தர் நம் கண்களைத் திறந்து, நமக்குக் காண்பிப் பாராக. மனிதனால் அறியப்பட்டது எடுக்கப்பட்டுவிட்டால், எவ்வளவு மீதியாயிருக்கும்? நாம் கீழ்நோக்கி வேர்கொள்ளும் படி தேவன் நம்மில் வேலைசெய்வாராக.

ஆழமான அனுபவங்கள்

"மேன்மைபாராட்டுகிறது எனக்குத் தகுதியல்லவே; ஆகிலும்,

கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் சொல்லுகிறேன்," என்று கொரிந்தியருக்கு எழுதும்போது பவுல் சொல்லுகிறார் (2 கொரி. 12:1). 2 கொரிந்தியர் 12-ல் உள்ளதை அவர் எழுதினது தனக்கு "இலாபமல்லவே" (கிரேக்கம்) என்று அவர் ஒத்துக்கொண்டார். ஆனால் மற்றவர்களினிமித்தம் அவர் அதைச் செய்யவேண்டும்; அவர் "கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும்"பற்றிப் பேச கடமைப்பட்டிருந்தார். சகோதர சகோதரிகளே, இதுவே நம் மனப்பான்மையாகவும் இருக்கவேண்டும். நம்மில் அநேகர் தரிசனங்கள், வெளிப்பாடுகள் என்ற பரீட்சையைத் தாக்குப்பிடிக்கமுடியாது; நமக்கு ஒரு சிறிய அனுபவம் வந்தவுடன், நாம் எக்காளம் ஊதிவிடுகிறோம், எல்லாரும் அதைப்பற்றி அறிந்துகொள்கிறார்கள். கர்த்தருடைய தரிசனங்களையும் வெளிப்பாடுகளையும் குறிப்பிடுவதால் தனக்கு எந்த லாபமும் இல்லை என்பதை பவுல் அறிந்திருந்தார். அப்படியானால் அவர் ஏன் அவைகளைக் குறிப்பிட்டார்? அவர் அப்படிச் செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டார், ஏனென்றால் சிலர் அவருடைய அப்போஸ்தலத்துவத்தை சந்தேகித்தார்கள், கிறிஸ்தவ விசுவாசத்தின் அஸ்திவாரத்தைக்குறித்த பிரச்சினைகள் இருந்தன.

பவுல் தன் வெளிப்பாடுகள் எல்லாவற்றையும் திறந்து காண்பித்துவிட்டாரா? அது வெகுதூரம். "கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை [பவுல்தாமே] அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்," என்று அவர் எழுதினார் (வ. 2). பதினான்கு வருடங்கள்வரை அவர் இந்த அனுபவத்தை வெளிப்படுத்தவில்லை. பவுலுக்குள் எப்படிப்பட்ட ஆழம் இருந்தது! நாம் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட ஏதோவொன்றை ஏழு வருடங்களுக்கு மறைத்துவைத்தால் அது ஓர் அதிசயமாக இருக்கும். ஆனால் பதினான்கு வருடங்களாக பவுல் தன் அனுபவத்தை ஒரு போதும் வெளிப்படுத்தவில்லை; பதினான்கு வருடங்களாக தேவனுடைய சபைக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது; பதினான்கு வருடங்களாக அப்போஸ்தலர்களுள் ஒருவர்கூட அதைப்பற்றிக் கேட்டதில்லை. பவுலுடைய வேர்கள் நிலத்தின் அடியில் ஆழமாக இருந்தன.

"பவுல் அவர்களே, பதினான்கு வருடங்களுக்குமுன்பு உம்முடைய அனுபவத்தைப்பற்றிய எல்லாவற்றையும் நாங்கள் கேட்கட்டும். மூன்றாம் வானத்தில் உம்முடைய அனுபவத்தைப்பற்றி எங்களுக்குச் சொல்லும். முழுக் கதையையும்

அறிந்துகொள்வதற்கு அது எங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்," என்று சொல்லும்படி சிலர் விரும்பியிருக்கலாம். ஆனால் "அந்த மனுஷன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன். அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்," என்று அவர் கூறினார் (வசனம் 3-4). இந்நாள்வரை பவுலுடைய இந்த அனுபவம்வேரோடு பிடுங்கப்படவில்லை; அந்த அனுபவத்தைப்பற்றி இன்னும் யாருக்கும் தெரியாது.

சகோதர சகோதரிகளே, வேர் என்ற காரியம் அதி முக்கியத்துவம்வாய்ந்த காரியமாகும். பவுலுடைய வேலை உங்களிடம் இருக்கவேண்டுமானால், பவுலுடைய "வேர்" உங்களிடம் இருக்கவேண்டும்; பவுலுடைய புறம்பான நடத்தை உங்களிடம் இருக்கவேண்டுமானால், பவுலுடைய உள்ளான ஜீவன் உங்களிடம் இருக்கவேண்டும்; பவுலுடைய வெளியரங்கமான வல்லமை உங்களிடம் இருக்கவேண்டு மானால், பவுலுடைய இரகசியமான அனுபவம் உங்களிடம் இருக்கவேண்டும். இன்று கிறிஸ்தவர்களுடைய பிரச்சினை என்னவென்றால், அவர்கள் எந்த ஆவிக்குரிய காரியத்தையோ அல்லது எந்த விசேஷமான அனுபவத்தையோ திறந்து காண்பிக்கப்படாமல் வைத்திருக்கமுடியாது. அவர்கள் கொஞ்சம் அனுபவத்தைப் பெற்றவுடன், அவர்கள் அதைப் பரவலாக சொல்லித்தீரவேண்டும். அவர்கள் தங்கள் வாழ்க்கையை மனிதர்களுக்குமுன்பாக வாழ்கிறார்கள்; தங்களுக்குள் எதுவும் மறைந்திருக்கவில்லை. அவர்களிடம் எந்த வேரும் இல்லை. பவுலுடைய அனுபவத்தை தேவன் நமக்குக் காண்பிப்பாராக, ஆழங்கொள்வதற்குள்ளாக அவர் நம்மை வழிநடத்துவாராக!

மேலோட்டமான வாழ்க்கை

எசேக்கியாவின் வியாதியையும், மீண்டும் சுகமடைந்ததையும்பற்றிய செய்தி பாபிலோனிய அரண்மனைக்கு எட்டியபோது, எசேக்கியாவுக்கு கடிதங்களோடும் பரிசோடும் தூதுவர்கள் அனுப்பப்பட்டார்கள். எசேக்கியா தேவனுடைய கிருபையைப் பெற்றவனாக இருந்தான், ஆனால் கிருபையின் பரீட்சையை அவனால் தாக்குப்பிடிக்கமுடியவில்லை. "எசேக்கியா அவர்களைக் கண்டு சந்தோஷப்பட்டு, தன் பொக்கிஷ சாலையையும், வெள்ளியையும், பொன்னையும் கந்தவர்க்கங்களையும், நல்ல பரிமளதைலத்தையும், தன் ஆயுதசாலை அனைத்தையும், தன் பொக்கிஷசாலைகளில் உள்ளதெல்லாவற்றையும் அவர்களுக்குக் காண்பித்தான்," என்று தேவனுடைய வார்த்தைச் சொல்லுகிறது (வசனம் 2). எல்லாவற்றையும்

காட்சியாக்கவேண்டும் என்ற மயக்கத்தை எசேக்கியா மேற்கொள்ளமுடியவில்லை. அவன் சற்றுமுன்தான் அற்புதமாக தன் வியாதியிலிருந்து சுகமாக்கப்பட்டான், அவன் சுய-முக்கியத்துவத்தை உணர்ந்து, உலகத்தில் வெகுசிலர் மட்டுமே தன்னைப்போல இப்பேர்ப்பட்ட குறிப்பிடத்தக்க அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்று அவன் நினைத்தான் என்பதில் சந்தேகமேயில்லை. எத்தனைப்பேர் தாங்கள் சுகமாக்கப்படுகிற போது, ஆகாசுடைய சூரியகடியாரத்தில் பத்துப்பாகைப் பின்னிட்டுத் திரும்புகிற ஓர் ஆச்சரியமான அடையாளத்தைப் பெற்றிருக்கிறார்கள் (ஏசா. 38:8)? எசேக்கியா தன் மேட்டிமையில் தனது பொக்கிஷங்கள் எல்லாவற்றையும் காட்சியாக்கினான். அவன் சிலுவையின் இடைபடுதலினூடாய்க் கடந்துசெல்லவில்லை என்பது இதன் அர்த்தமாகும். அவனுடைய இயற்கையான ஜீவன் கையாளப்படவில்லை. அவனுடைய வேர்கள் யாவும் அம்பலமாக்கப்பட்டுவிட்டன என்பது வெளிப்படையாக இருக்கிறது. எசேக்கியா அறிந்திருந்ததும், அவனிடம் இருந்ததும் ஆகிய எல்லாம் பாபிலோனியர்களால் அறியப்பட்டது. இந்த அம்பலமாக்குதலின் காரணமாக, "சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தையைக் கேளும். இதோ, நாட்கள் வரும், அப்பொழுது உன் வீட்டில் உள்ளதிலும், உன் பிதாக்கள் இந்நாள் வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாய் வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும்," என்று ஏசாயா அவனிடம் சொன்னான் (39:5-6). நாம் மற்றவர் களுக்கு காரியங்களைக் காட்சியாக்குகிற அளவு நம்முடைய இழப்பின் அளவாக இருக்கும். இது ஒரு பயபக்திக்குரிய காரியமாகும், இது நம் கவனத்தையும் கோருகிறது.

ஐயகோ, அநேக மக்கள் தங்கள் அனுபவங்களைத் திறந்துகாண்பிக்காமல் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாது! அவர்கள் தங்கள் இருதயம் பூரிப்படைய பேசவேண்டும். இது, எசேக்கியா தன் பொக்கிஷங்களை மற்றவர்களுக்குத் திறந்துகாண்பிப்பதைப்போன்றது. "அநேக சகோதரர்கள் வியாதிப்படுகிறார்கள். அவர்கள் சுகமடையும்போது, தங்கள் சாட்களைக் கூறுகிறார்கள். நானும் ஏதோவொரு வியாதியைப் பெறலாம் என்று விரும்புகிறன், ஆனால் சாவுக்கேதுவான வியாதியல்ல, தேவன் என்னை சுகமாக்குவார்; அப்போது அடுத்த சாட்சிக் கூட்டத்தில் சொல்வதற்கு என்னிடம் ஏதோவொன்று இருக்கும்," என்று ஒரு சகோதரன் ஒருமுறை கூறினான். சுகமடைவதற்கு இந்த சகோதரனுடைய உள்நோக்கம் என்னவென்றால், சாட்சிகொடுக்கக்கூடியவனாக இருப்பது. அவன் பேசுவதற்கு ஏதோவொன்றைக் கொண்டிருப்பதற்கு ஓர் அனுபவத்தை நாடினான். ஆ! இந்த மேலோட்டமான

வாழ்க்கைமுறை நமக்குக் கடுமையான இழப்பைக் கொண்டுவருகிறது; ஆவிக்குரிய முன்னேற்றத்தின் சாத்தியக்கூறை அது கிறுக்கித் தள்ளுகிறது.

கண்காட்சியாக்காமல் சாட்சிகொடுத்தல்

அப்படியானால் நாம் சாட்சிகொடுக்க வேண்டாமா? ஆம், நாம் கொடுக்கவேண்டும். பவுல் அப்படிச்செய்தார், தலைமுறை தலைமுறையாக ஏராளமான தேவனுடைய பிள்ளைகளும் அப்படிச் செய்திருக்கிறார்கள். ஆனால் சாட்சிகொடுப்பது என்பது ஒரு காரியம்; ஒருவனுடைய அனுபவத்தைக் கண்காட்சியாக்குவதில் பூரிப்படைவது என்பது முற்றிலும் வேறொரு காரியம். சாட்சிகொடுப்பதில் நம் நோக்கம் என்ன? அது, மற்றவர்கள் லாபமடைய வேண்டும் என்பதா அல்லது நாம் பேசுகிற இன்பத்தை அடையவேண்டும் என்பதா? ஒருவருடைய சொந்த குரலைக் கேட்பதற்கான பிரியமும், மற்றவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற விருப்பமும் முற்றிலும் வித்தியாசமான இரண்டு காரியங்களாகும். நாம் சாட்சிகொடுப்பதற்கான காரணம் என்னவென்றால், ஒரு பிரச்சினை இருக்கிறது, நாம் அதைக்குறித்துப் பேசியாகவேண்டும். சாட்சி என்பது உணவுக்குப்பின் நடக்கிற ஒரு உரையாடல் அல்ல. பல வேளைகளில் நாம் புறங்கூறும்போது, ஆவிக்குரிய ஐசுவரியங்கள் ஒழுகிப்போய்விடுகின்றன. கர்த்தர் அப்படி நடத்தும்போது, நாம் சாட்சிகொடுக்கவேண்டும், ஏனென்றால் நாம் மற்றவர்களுக்கு உதவிசெய்ய விரும்புகிறோம். 2 கொரிந்தியர் 12-ல் பவுல் சாட்சிகொடுத்தார், ஆனால் அவர் தன் அனுபவத்தை பதினான்கு வருடங்களுக்குமுன்பு லேசாகக் கூட திறந்துகாண்பிக்கவில்லை. அவர் தன் அனுபவத்தை பதினான்கு வருடங்களுக்கு மறைத்தார், யாருக்கும் அதைப் பற்றித் தெரியாது. இந்த அனுபவத்தைப்பற்றி அவர் பேசினபோதுகூட, அவர் எல்லாவற்றையும் திறந்துகாட்டிவிட வில்லை. அவர் வெறுமனே அந்த அனுபவத்தைக் குறிப்பிட்டார்; அவர் முழுக் கதையையும் சொல்லவில்லை. அவர் ஒரு வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டு, பேசமுடியாத வார்த்தைகளைக் கேட்டார் என்ற உண்மையை வெறுமனே குறிப்பிட்டார். அவர் கேட்ட வார்த்தைகளை மற்றவர்களிடம் சொல்லவில்லை. இன்றுகூட மூன்றாம் வானம் ஒரு பரம இரகசியமாக இருக்கிறது, அது எப்படி இருக்கும் என்பது நமக்கு இன்னும் தெரியாது.

சகோதர சகோதரிகளே, நம் பொக்கிஷங்கள் யாவை? நம் தங்கமும், வெள்ளியும், கந்தவர்க்கங்களும், விலையேறப் பெற்ற தைலங்களும், விலையேறப்பெற்ற பொருட்களும் என்ன? நம் ஆயுதசாலை என்ன? தேவனுக்குரியது எல்லாம் தங்கம்

என்பதையும், சிலுவையின் மீட்போடு தொடர்புடைய எதுவும் வெள்ளி என்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். கந்தவர்க்கங்கள் என்பது நம் காயங்களின் விளைவுகளாகும், விலையேறப்பெற்றவைகள் என்பவை இராஜ்ஜியத்தோடு தொடர்புடையவைகளாகும், ஆயுதசாலை என்பது தேவனிடமிருந்தும் கர்த்தரிடமிருந்தும் நாம் பெற்றுக்கொண்ட கர்த்தருடைய வேலையாகும். இவை யாவும் உபதேசங்களோ, வேதாகம போதனைகளோ, இறையியலோ அல்ல. இவைகள், கர்த்தரோடுள்ள நம் ஐக்கியத்தின்மூலம் நாம் பெற்றவைகளாகும். நாம் தேவனோடு ஐக்கியங்கொள்ளும்போதும், அவரோடு தொடர்புகொள்ளும்போதும், அவரால் கையாளப்படும்போதும், நாம் அநேகக் காரியங் களை அடைகிறோம். அவைகளைப்பற்றி ஏனோதானோவென்று பேசுவது தவறானது. நாம் சாட்சிகொடுக்கக்கூடாது என்பதல்ல இதன் அர்த்தம். ஆனால் அநேக அனுபவங்கள் மறைக்கப்படவேண்டும் என்பதை நாம் உணரவேண்டும். சகோதர சகோதரிகளே, இது கிறிஸ்தவ வாழ்க்கையில் முக்கியமான காரியமாகும். அநேக ஆவிக்குரிய அனுபவங்கள் மறைக்கப்படவேண்டும், அம்பலமாக்கப்படக் கூடாது.

சிலவேளைகளில் கர்த்தராகிய இயேசு தம் சாட்சியைக் கொடுத்தார், ஆனால் அவர் ஒருபோதும் வாயாடியாக இருக்கவில்லை. சாட்சிகொடுப்பது என்பது ஒரு காரியம், வாயாடியாக இருப்பது என்பது வேறொரு காரியம். கர்த்தர் வியாதியுள்ளவர்களை சுகமாக்கி, சுகமாக்கப்பட்ட கதையை இரகசியமாக வைத்துக்கொள்ளும்படி வலியுறுத்தினார். இந்தக் கட்டளை, மாற்கு எழுதின சுவிசேஷத்தில் மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது. "நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளை யெல்லாம் அவர்களுக்கு அறிவி," என்று கர்த்தர் ஒருமுறை ஒரு நபரிடம் கூறினார் *(5:19)*. கர்த்தர் நமக்காகச் செய்த பெரிய காரியங்களைக்குறித்து நாம் பேசலாம், ஆனால் நாம் அவைகளை செய்திகளாகப் பரவலாக வெளியிடக்கூடாது; இது நம்மை எந்த வேரும் இல்லாதவர்கள் என்றுதான் அம்பல மாக்குகிறது. வேர் இல்லாமல் இருப்பது எந்தப் பொக்கிஷமும் இல்லாதிருப்பதாகும்; எந்த மறைவான வாழ்க்கையோ அல்லது மறைவான அனுபவமோ இல்லாதிருப்பதாகும். நம்முடைய சில அனுபவங்கள் மூடப்பட்டதாகவே இருப்பது அவசியம்; எல்லாவற்றையும் திறந்துவிடுவது எல்லாவற்றையும் இழந்துவிடுவதாகும்.

நம் பொக்கிஷம் எல்லாவற்றையும் நாம் காட்சியாக்கினால், சிறைபிடிப்பைத் தவிர்க்கமுடியாது என்பதையும் நாம் ஞாப கத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். மரணமும் அம்பலமும் சேர்ந்தே

செல்கின்றன; மற்றும், ஆவிக்குரிய வறட்சியும் அம்பலமும்கூட சேர்ந்தே செல்கின்றன. நாம் ஒரு சாட்சி கொடுக்கவேண்டும் என்றாலும், நாம் பவுலைப்போல இருக்கவேண்டும், அவருக்கு மேன்மைப்பாராட்டுவது "*தகுதி யல்லவே; ஆகிலும்*" அவசியத்தின் *நிமித்தம் அப்படிச் செய்தார் (2 கொரி. 12:1).* பலவேளைகளில் ஒரு மனிதன் அம்பலமாக்கப்பட்டிருக்கிறபோது சாத்தானுடைய தாக்குதல் வருகிறது. எந்தவிதமான அம்பலமாக்குதலும் நம்மை இழப்புக்குத் திறந்துவைக்கிறது. அநேகர் தங்கள் வியாதியிலிருந்து சுகமாக்கப்படுகிறார்கள், அவர்கள் தேவனுடைய மகிமைக்காக சாட்சிகொடுக்கிறார்கள். ஆனால் சுகமாகுதலைப்பற்றிய அநேக சாட்சிகள் தேவனுடைய மகிமைக்காக இல்லை, மாறாக ஒருவனுடைய சொந்த விசுவாசத்தின் மகிமைக்காக இருக்கிறது. இதன் விளைவாக, வியாதி திரும்பவும் வருகிறது. இவர்கள் ஒருமுறை தங்கள் சாட்சியைக் கொடுத்தப்பின், மீண்டும் அதே காரியத்தினால் தாக்கப்படுகிறார்கள். தங்கள் வேர்களை மூடுகிறவர்களை தேவன் மூடுகிறார், தங்கள் வேர்களைத் திறந்துகாண்பிக் கிறவர்களை தேவன் பாதுகாப்பதில்லை, அவர்கள் தாக்குதல்களுக்கு திறந்திருப்பார்கள் என்பதை இது காண்பிக்கிறது. நாம் சாட்சிகொடுக்கவேண்டும் என்று தேவன் விரும்பினால், நாம் அதைச் செய்யவேண்டும். ஆனால் மறைக்கப்பட வேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு. நாம் அவருக்கு முன்பாக மறைக்கிறவைகளை தேவன் பாதுகாக்கிறார், நாம் அதை அனுபவித்துமகிழ்கிறோம்.

நம் வேலைக்கும் இது பொருந்துகிறது. தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் அவர் ஏதோவொன்றை நம்மூலமாக நிறைவேற்றியிருக்கிறார், ஆனால் அவர் நிறைவேற்றியிருப்பது விளம்பரத்தைப்பற்றிய காரியமல்ல அல்லது பிரசாரத்திற்கான பொருளல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். நாம் தேவனுடைய வேலையை அம்பலப்படுத்தினால், உடனே அதின்மீது மரணத்தின் தொடுதல் வருவதைக் காண்போம்; இழப்பு, நம்மை நாமே அம்பலப்படுத்துகிற அளவுக்கு ஒத்திருக்கும். தாவீது இஸ்ரயேல் மக்களை எண்ண ஆரம்பித்தவுடன், மரணம் வர ஆரம்பித்தது *(2 சாமு. 24).* இவ்விதமான அம்பலத்தி லிருந்து தேவன் நம்மை விடுவிப்பாராக.

கர்த்தரோடு நமக்கு என்னென்ன இரகசியங்கள் இருக் கிறதோ அவையெல்லாம் பாதுகாக்கப்படவேண்டும். நம்முள் தேவனுடைய அறிவுரையின்படி மட்டுமே நாம் அசைய முடியும். ஏதோவொன்றை வெளிப்படுத்தும்படி அவர் நம்முள் அசைந்தால் மட்டுமே, நாம் அதை வெளிப்படுத்த துணிவோம். அவர் ஏதோவொரு அனுபவத்தை ஒரு சகோதரனிடம் நாம் பகிர்ந்துகொள்ளவேண்டும்

என்று விரும்பினால், நாம் அதைப் பிடித்துவைத்துக்கொள்ள துணியக்கூடாது, ஏனென்றால் அது கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அவயவங்களின் விதியை மீறுவதாக இருக்கும். கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அவயவங்களின் ஒரு விதிதான் ஐக்கியம். நாம் இந்த விதியை அடக்கினால், பாய்ந்தோடுதல் நின்றுவிடுகிறது. நாம் எதிர் மறையாக இல்லாமல், நேர்மறையாக இருந்து, மற்றவர் களுக்கு ஜீவனைப் பரிமாறவேண்டும். ஆனால் நாள்முழு வதையும் நாம் நம்மைக்கொண்டும், நம் சொந்த காரியங் களைக்கொண்டும் நிரப்பினால், இந்த வாயாடித்தனமும், அம்பலப்படுத்துதலும் எதிரியின் திடீர் தாக்குதலுக்கு நம்மைத் திறக்கிறது. கிறிஸ்துவின் சரீரம் என்பது என்ன என்றும், அவயவங்களிடையே உள்ள பாய்ந்தோடுதல் என்பது என்ன என்றும் நாம் கற்றுக்கொள்வோம் என்று நான் நம்புகிறேன்; ஆனால் கர்த்தருக்குமுன்பாக நமக்கு உள்ள மறைவான பகுதியை, அதாவது மற்றவர்களுக்குத் தெரியாத அனுபவங் களைப் பாதுகாப்பதற்கான தேவையை நாம் கற்றுக் கொள்வோம் என்றும் நான் நம்புகிறேன். எந்த வேரும் அம்பலமாக்கப்படக்கூடாது.

நம்மை நாமே ஆழமாக விரிவாக்கி, கீழ்நோக்கி வேர்கொள்ளும்போது, "ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது," என்பதை நாம் கண்டுகொள்வோம். நம் உள்ளான ஜீவனின் ஆழங்களிலிருந்து நாம் ஐசுவரியங்களைக் கொண்டுவர முடியும்போது, மற்றோருடைய வாழ்வுகள் ஆழமாக பாதிக்கப் படுவதைக் காண்போம். நம் உள்ளான ஆள்தத்துவம் தொடப்பட்ட அந்த நிமிடத்தில், மற்றவர்கள் உதவியைப் பெற்று, பிரகாசிப்பிக்கப்படுவார்கள். தங்கள் அறிவுக்கு அப்பாற்பட்ட ஏதோவொன்று இருக்கிறது என்று அவர்கள் அறிவார்கள். ஆழத்தை ஆழம் தொடும்போது, ஆழம் ஆழத்திற்கு பதில்கொடுக்கும். நம் வாழ்க்கைக்கு ஆழம் இல்லையென்றால், நம் மேலோட்டமான வேலை மற்றோ ருடைய வாழ்வுகளை மேலோட்டமாக மட்டுமே பாதிக்கும். நாம் மீண்டும் ஒருமுறை கூறுகிறோம்: "ஆழத்தை ஆழம் (மட்டுமே) கூப்பிடுகிறது."

கர்த்தருடைய இரண்டு வேலையாட்களைப்பற்றி

வாச்மென் நீ அவர்களும், அவருடைய உடன் வேலையாளாகிய விட்னெஸ் லீ அவர்களும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு செய்த ஊழியம், எண்பது வருடங்களுக்கும்மேலாக பூமியில் எல்லா கண்டங்களிலும் உள்ள கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஓர் ஆசீர்வாதமாக இருந்திருக்கிறது என்பதற்காக நாங்கள் கர்த்தருக்கு நன்றிசெலுத்துகிறோம். அவர்கள் எழுதியவைகள் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எங்க ளுடைய வாசகர்கள் வாச்மென் நீயைப்பற்றியும், விட்னெஸ் லீயைப்பற்றியும் பல கேள்விகளை எங்களிடம் கேட்டிருக் கிறார்கள். அவர்களுடைய கேள்விகளுக்கான பதிலாக இந்த இரண்டு சகோதரர்களின் வாழ்க்கையையும் வேலையையும் பற்றிய இந்தச் சுருக்கமான குறிப்பை நாங்கள் வழங்குகிறோம்.

வாச்மென் நீ

வாச்மென் நீ பதினேழாவது வயதில் கிறிஸ்துவைப் பெற்றுக்கொண்டார். உலகமெங்கும் உள்ள தேடும் இருதய முள்ள விசுவாசிகளிடையே அவருடைய ஊழியம் நன்கு அறியப்பட்ட ஒன்று. ஆவிக்குரிய வாழ்க்கையைப்பற்றியும், கிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும் உள்ள உறவைப்பற்றியும் அவர் எழுதியவைகளிலிருந்து அநேகர் உதவிபெற்றிருக்கிறார்கள். இருந்தாலும், சபை வாழ்க்கையை நடைமுறைப்படுத்துதல், கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டி யெழுப்புதல் ஆகியவைகளை வலியுறுத்தின அவருடைய ஊழியத்தின் சம அளவுக்கு முக்கியமான இன்னோர் அம்சத்தைப் பற்றி அநேகருக்குத் தெரியாது. கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றியும் சபை வாழ்க்கையைப்பற்றியும் சகோதரர் நீ பல புத்தகங்களை எழுதியுள்ளார். வாச்மென் நீ தனது வாழ்க்கையின் முடிவுவரை, தேவனுடைய வார்த்தையில் உள்ள வெளிப்பாட்டைத் திரைநீக்கிக் காண்பிப்பதற்காக கர்த்தரால் கொடுக்கப்பட்ட கொடையாக இருந்தார். சீனாவில் இருபது வருடங்கள் சிறையில் கர்த்தருக்காக பாடுபட்டபின்பு, இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள சாட்சியாக 1972-ல் அவர் இறந்தார்.

விட்னெஸ் லீ

விட்னெஸ் லீ அவர்கள், வாச்மென் நீயின் மிக நெருக்கமான, மிக நம்பகமான உடன் வேலையாளாக இருந்தார். 1925-ல் பத்தென்பது வயதில், அவர் சக்திவாய்ந்த ஆவிக்குரிய

மறுபிறப்பை அனுபவித்தார், மேலும் ஜீவனுள்ள தேவனை சேவிக்கும்படி தன்னை அவருக்கு அர்ப்பணித்தார். அந்த நேரத்திலிருந்து அவர் தீவிரமாய் வேதாகமத்தைப் படிக்க ஆரம்பித்தார். அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப ஏழு வருடங்களில் ப்ளைமவுத் பிரதரனால் பெருமளவு ஆட்கொள்ளப்பட்டார். அதன்பின் அவர் வாச்மென் நீயை சந்தித்தார், அடுத்த 17 வருடங்களுக்கு 1949வரை அவர் சீனாவில் சகோதரர் நீயின் உடன் வேலையாளாக இருந்தார். இரண்டாம் உலகப் போரின்போது, சீனா ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, அவர் ஜப்பானியர்களால் சிறையில் அடைக்கப்பட்டு, கர்த்தருக்கு செய்த தன் உண்மையுள்ள சேவைக்காகப் பாடுபட்டார். தேவனுடைய இவ்விரண்டு வேலையாட்களின் ஊழியமும் வேலையும் சீனாவில் கிறிஸ் தவர்களிடையே மாபெரும் எழுப்புதலைக் கொண்டுவந்தது, அது நாடுமுழுவதும் சுவிசேஷம் பரவுவதையும் நூற்றுக்கணக்கான சபைகள் கட்டியெழுப்பப் படுவதையும் விளைவித்தது.

1949-ல் சீனாவில் கர்த்தரை சேவித்த தன் உடன் வேலையாட்கள் எல்லாரையும் வாச்மென் நீ ஒன்றாக அழைத்து, தாயகத்திற்கு வெளியே தைவான் என்ற தீவில் ஊழியத்தைத் தொடரும்படி விட்னெஸ் லீக்குப் பொறுப் பளித்தார். அடுத்த சில வருடங்களில், தைவானிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் தேவனுடைய ஆசீர்வாதத்தின் காரண மாக, நூற்றுக்கும் அதிகமான சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

1960-களின் ஆரம்பத்தில் விட்னெஸ் லீ அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்துசெல்லும்படி கர்த்தரால் நடத்தப்பட்டார்; அங்கு கர்த்தருடைய பிள்ளைகளின் நலனுக்காக 35 வருடங் களுக்கும் மேலாக ஊழியம்செய்து, பணியாற்றினார். 1974முதல் ஜூன் 1997-ல் அவர் கர்த்தரிடம் செல்லும்வரை, கலி∴போர்னியாவில் அனஹெம் என்ற நகரத்தில் அவர் இருந்தார். அமெரிக்காவில் பல ஆண்டுகளாக செய்த அவருடைய வேலையில் 300-க்கும் மேற்பட்ட புத்தகங்களை அவர் வெளியிட்டார்.

விசேஷமாக, கிறிஸ்துவின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்களைப்பற்றிய ஆழமான அறிவையும் அனுபவத்தையும் விரும்புகிற தேடும் இருதயமுள்ள கிறிஸ்தவர்களுக்கு விட்னெஸ் லீயின் ஊழியம் உதவியாக இருக்கிறது. எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய அவருடைய சரீரமான சபையைக் கட்டி யெழுப்புவதற்காக கிறிஸ்துவை அறிவது எப்படி என்பதை சகோதரர் லீயின் ஊழியம் முழு வேதத்திலுள்ள தெய்வீக வெளிப்பாட்டைத் திறந்துகாண்பித்து நமக்கு வெளிப் படுத்துகிறது. கிறிஸ்துவின் சரீரத்தைக்

கட்டியெழுப்புகிற இந்த ஊழியத்தில் எல்லா விசுவாசிகளும் பங்குபெறவேண்டும்; இதனால் சரீரம் அன்பில் தன்னைத்தானே கட்டியெழுப்ப முடியும். இந்தக் கட்டுதலை நிறைவேற்றுவது மட்டுமே கர்த்தருடைய நோக்கத்தை நிறைவாக்கி, அவருடைய இருதயத்தைத் திருப்தியாக்கமுடியும்.

இவ்விரண்டு சகோதரர்களுடைய ஊழியத்தின் பிரதான குணாதிசயம் என்னவென்றால், அவர்கள் வேதாகமத்தின் தூய்மையான வார்த்தையின்படி சத்தியத்தைப் போதித்தார்கள்.

வாச்மென் நீ மற்றும் விட்னெஸ் லீயின் பிரதானமான நம்பிக்கைகளின் சுருக்கமான விவரிப்பு பின்வருமாறு:

1. பரிசுத்த வேதாகமம் பிழையற்ற, தேவனால் சுவாசித்து ஊதப்பட்ட, பரிசுத்த ஆவியானவரால் வார்த்தை வார்த்தை யாக ஏவப்பட்ட, முழுமையான தெய்வீக வெளிப்பாடாக இருக்கிறது.

2. தேவன் ஒரேவொரு மூவொரு தேவன், அதாவது நித்தியத்திலிருந்து நித்தியம்வரை சம அளவில் உடன் இருக்கிற, பரஸ்பரமாக ஒருவருக்குள் ஒருவர் இருக்கிற பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்.

3. தேவனுடைய குமாரன், அதாவது தேவன்தாமே நம் மீட்பராகவும் இரட்சகராகவும் இருக்கும்படி கன்னியாகிய மரியாளிடமிருந்து பிறந்த, இயேசு என்ற பெயரையுடைய ஒரு மனிதனாக மனிதமாம்சமானார்.

4. உண்மையான மனிதராகிய இயேசு பிதாவாகிய தேவனை மனிதர்களுக்குத் தெரியப்படுத்தும்படி முப்பத்து மூன்றரை வருடங்கள் பூமியில் வாழ்ந்தார்.

5. தேவனுடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு தேவனால் அபிஷேகிக்கப்பட்ட கிறிஸ்துவாகிய இயேசு நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து, நம் மீட்பை நிறைவேற்றுவ தற்காக தம் இரத்தத்தைச் சிந்தினார்.

6. இயேசுகிறிஸ்து மூன்று நாட்கள் அடக்கம்பண்ணப் பட்டபிறகு, மரித்தோரைவிட்டு எழுப்பப்பட்டார்; நாற்பது நாட்களுக்குப்பிறகு அவர் பரலோகத்திற்குள் ஏறிச்சென்றார், அங்கே தேவன் அவரை எல்லாருக்கும் கர்த்தராக்கினார்.

7. கிறிஸ்து பரமேறியபின்பு தம்மால் தெரிந்துகொள்ளப் பட்ட அவயவங்களை ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணும்படி தேவனுடைய ஆவியை ஊற்றினார். பாவிகளைக் கண்டித்து உணர்த்தவும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குள் தெய்வீக ஜீவனை வழங்கி அவர்களை மறுபடிபிறப்பிக்கவும், கிறிஸ்துவின் விசுவாசிகள் ஜீவனில் வளர்வதற்காக அவர்களில் குடியிருக்கவும், கிறிஸ்துவின் முழு வெளிப்படுதலுக்காக அவருடைய சரீரத்தைக் கட்டியெழுப்பவும் இந்த ஆவியானவர்

இன்று பூமியில் அசைகிறார்.

8. இந்த யுகத்தின் முடிவில் கிறிஸ்து தம் விசுவாசிகளை எடுத்துக்கொள்ளவும், உலகத்தை நியாயந்தீர்க்கவும், பூமியைச் சொந்தமாக்கிக்கொள்ளவும், தம் நித்திய இராஜ்ஜியத்தை ஏற்படுத்தவும் திரும்பிவருவார்.

9. ஜெயங்கொள்கிற பரிசுத்தவான்கள் ஆயிரவருட அரசாட்சியில் கிறிஸ்துவோடு அரசாளுவார்கள்; கிறிஸ்துவில் விசுவாசிக்கிற எல்லாரும் புதிய வானத்திலும் புதிய பூமியிலும் புதிய எருசலேமில் உள்ள தெய்வீக ஆசீர்வாதங்களில் நித்தியத்திற்கும் பங்குபெறுவார்கள்.

விநியோக கொள்கை

இந்த ஏழு புத்தகங்களின் மின்னணு வடிவத்தை இலவசமாக வழங்குவதில் லிவிங் ஸ்ட்ரீம் மினிஸ்ட்ரி மகிழ்ச்சியடைகிறது. இந்தப் புத்தகங்களை அநேகர் முழுவதுமாக வாசிப்பார்கள் என்றும் அவைகளை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவார்கள் என்றும் நங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம். நல்ல ஒரு ஒழுங்கை பராமரிப்பதற்காக, இந்தக் கோப்புகளை உங்கள் சொந்த பயன்பாட்டிற்காக மட்டுமே அச்சிட்டுக்கொள்ளும்படி வேண்டிகொள்கிறோம். இந்தக் கோப்புகளை எந்த வடிவிலும், வேறெங்கும் மறுசமர்ப்பிப்பு செய்யாதீர்கள். கூடுதலாக பிரதிகளை நீங்கள் நகலெடுக்க விரும்பினால் copyrights@lsm.org ல், ஒரு எழுதப்பட்ட விண்ணப்பத்துடன் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். நடைமுறை சட்டத்திற்கேற்ப காப்புரிமை சம்பந்தமான அறிவிப்புகள் யாவும் மதிக்கப்படவேண்டும் என்றும் நாங்கள் கேட்டுகொள்கிறோம். இந்த பிடிஎப் கோப்புகள் எந்த வகையிலும் வேறெந்த பயன்பாட்டிற்கும் திருத்தப்பட, மாற்றியமைக்கப்படக் கூடாது.